பக்கங்கள்:11 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 24 சனிக்கிழமை 09.07.2022 கதிர் 246

**இது ரகசியம் அல்ல!**

இன்று பொதுமக்களுடன் சேர்ந்து எதிரணிகள் கூட்டாக முன்னெடுக்கும் எதிர்ப்பு நடவடிக்கை ஆட்சித் தரப்பைக் கிலிகொள்ளவைத்துவிட்டது என்பது உண்மைதான்.

இந்தப் போராட்டத்தை முடக்குவதற்கு எந்த எந்த ☞2

## பல்கலை மாணவர்களின் பேரணி மீது கண்ணீர்ப்புகைக் குண்டுத் தாக்குதல்!

### கொழும்பில் நேற்று மாலை பதற்றம்



அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியம் நடத்திய ஆர்ப்பாட்டப் பேரணி மீது பொலிஸாரால் கண்ணீர்ப்புகைக் குண்டுத் ☞03

## அரசுக்கு இறுதி அறிவிப்பை விடுக்க இன்று அனைவரும் திரண்டெழுவோம்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் அறைகூவல்



அரசுக்கு இறுதி அறிவிப்பை விடுக்கும் இன்றைய மாபெரும் ஜனநாயகப் போராட்டத்தை வெற்றிப் பாதைக்கு இட்டுச் செல்லநமது முழுப்பலத்தையும் கொடுப்பதுநம்அனைவரினதும் பொறுப்பும் கடமையும் ஆகும்.

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ விசேட அறிக்கை ஒன்றினூடாக அறிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நாட்டினதும் ☞03

## மக்கள் போராட்டத்தை முடக்க

# மேல் மாகாணத்தில் பொலிஸ் ஊரடங்கு

### கோட்டா அரசு உத்தரவு



மேல் மாகாணத்தின் பொலிஸ் பிரிவுகள் பல வற்றில் கோட்டாபய அரசால் பொலிஸ் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

நேற்றிரவு 9 மணி முதல் மறு அறிவித்தல் வரை பொலிஸ் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது என்று பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்கிரமரத்ன அறிவித்துள்ளார். ☞03

## சில தினங்களுக்குள் நெருக்கடிக்குத் தீர்வு

### இப்படிக் கூறுகின்றார் கோட்டா



நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமைகள் இன்னும் சில தினங்களுக்குள் தீர்க்கப்படும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்தநிலைமையில் எதிர்க்கட்சியினர் மக்களைத் திசை திருப்பி முன்னெடுத்துச் செல்லும் நிகழ்ச்சித் திட்டங்கள் மிகவும் கவலைக்குரியவை என்பதுடன், அவை நாட்டை மேலும் பின்னோக்கிக் கொண்டு செல்லக் கூடியவை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி நேற்று மாலை ☞2

## நிலைகுலைந்த இந்த அரசின் மற்றொரு கோழைத்தனமான செயலே ஊரடங்கு!

### ஐக்கிய மக்கள் சக்தி சாடல்

பொலிஸ்ஊரடங்குஉத்தரவு நிலைகுலைந்த அரசின் மற்றொரு கோழைத்தனமான செயல் என்று எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ சாடியுள்ளார்.

அவர் நேற்றிரவு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில்,

இந்நாடு ஏற்பட்டுள்ள நிலையைக் கண்டும் காணாதும், சிறிதும் உணர்வோ அல்லது விழிப்புணர்வோ இல்லாத அரசு மேல் மாகாணத்தில் பொலிஸ் ஊரடங்குச் சட்டத்தை திடீரென அமுல்படுத்தியுள்ளது.

இந்தக் கோழைத்தனமான அவமானமிக்க செயல் நாட்டின் தற்போதைய நிலைமையை அறிந்த எவரும் ☞2

## பொலிஸ் ஊரடங்கு; இது சட்டவிரோதம்!


### மக்கள் போராட்டத்தைத் தடுக்கும் அறிவிப்பு எனச் சுமந்திரன் பதிலடி



இலங்கையின் சட்டத்தில் 'பொலிஸ் ஊரடங்கு' என்று எதுவுமே கிடையாது. இது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான ☞2

## சிசுவின் சடலத்தை பையில் வைத்து மாமியார் வீட்டுக்கு அனுப்பிய பெண்

### திருகோணமலையில் சம்பவம்



திருகோணமலை – சீனக்குடா பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்து பிறந்து இரண்டு நாள்களேயான சிசுவின் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

சீனக்குடா – தினம் ☞2

## தனியார் மருந்தகங்களும் கோட்டா அரசுக்கு எதிர்ப்பு

### இன்று மூடப்பட்டிருக்கும் என அறிவிப்பு

நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து தனியார் மருந்தகங்களும் இன்று மூடப்படும் என அகில இலங்கை தனியார் மருந்தக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அத்தியாவசிய சேவையாகக் கருதி, எரிபொருளைப் பெற்றுத் தருமாறு அரசிடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்குப் பதில் கிடைக்காததால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது ☞2

### சர்வகட்சி அரசு தொடர்பில்

## மைத்திரி - சம்பிக்க நேற்று நேரில் பேச்சு



நாடாளுமன்றத்தில் 113 எம்.பிக்களின் ஆதரவு கிடைத்தகையோடு சர்வகட்சி ☞2

### ஓமந்தை எரிபொருள் நிரப்பு நிலையத்தில்

## குழப்பம் விளைவித்த மூன்று பேர் வாள்கள், பொல்லுகளுடன் கைது

(வவுனியா நிருபர்)

வவுனியா, ஓமந்தை எரிபொருள் நிரப்பு நிலையத்தில் குழப்பத்தில் ஈடுபட்ட மூவர் வாள்கள் மற்றும் பொல்லுகளுடன் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:-

ஓமந்தை எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்காக மக்கள் வீதியில் நீண்ட வரிசையில் பல நாள்களாகக் காத்திருக்கின்றனர். ☞2

## பருத்தித்துறைக் கடலில் கைதான 12 இந்திய மீனவர்களும் விடுவிப்பு



பருத்தித்துறை கடற்பரப்பில்கைதுசெய்யப்பட்ட 12 இந்திய மீனவர்களும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த வாரம் ☞03

## ஜூலை 11 நள்ளிரவு முதல் ரயில் கட்டணம் அதிகரிப்பு

ரயில் போக்குவரத்துக் கட்டணங்களும் அதிகரிக்கப்படவுள்ளன.

எதிர்வரும் 11ஆம் திகதி நள்ளிரவு 12 மணி முதல் அமுலாகும் வகையில், ரயில் போக்குவரத்துக் கட்டணம் அதிகரிக்கப்படுகின்றது என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, மூன்றாம் வகுப்புக்குரிய குறைந்தபட்ச கட்டணம் 20 ரூபா வரை அதிகரிக்கப்படவுள்ளது. ☞2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

எல்லை வரைக்கும் – அரசு – ஆட்சிப் பீடம் – சென்றது என்பதைப் பார்க்கும் போது அரசு பேதி குடித்த இக்கட்டு நிலையில்தான் தடுமாறுகிறது என்பது புலனாகும்.

அரசு அறிவித்துள்ள பொலிஸ் ஊரடங்கு என்பது வெறும் சுத்துமாத்து நடவடிக்கைதான். அப்படி ஓர் ஊரடங்கு 'சட்டரீதியாக' சட்டப் புத்தகத்தில் இல்லை. இல்லாத ஊரடங்கைப் பொலிஸ் பிறப்பித்து எப்படி நடவடிக்கை எடுக்கும், எவ்வாறு நீதிமன்றத்தை எதிர்கொள்ளும் என்பதுதான் கேள்வி.

இன்றைய போராட்டத்தை முறியடிப்பதற்கு வேறு வழியின்றி பொலிஸ் ஊரடங்கைப் பிறப்பிக்கும் நடவடிக்கையை அரசு எடுத்த போது, உடனடியாக அப்படி ஒன்று – 'பொலிஸ் ஊரடங்கு' என்று ஒன்று – இல்லை என்பதை விரைந்து அம்பலப்படுத்தினார் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன்.

அவரைத் தொடர்ந்து இலங்கை சட்டத்தரணிகள் சங்கமும் சுமந்திரன் கருத்தை உறுதிப்படுத்தியது. மேல் மாகாணத்தில் பொலிஸ் ஊரடங்கு என்ற அறிவிப்பை இலங்கை சட்டத்தரணிகள் சங்கமும் கடுமையாக ஆட்சேபித்துள்ளது.

அத்தகைய ஊரடங்கு அறிவிப்பு ஒன்றைப் பொலிஸ்மா அதிபர் விடுப்பதற்கு பொலிஸ் சட்ட விதிகளில் இடமேயில்லை. அத்தகைய ஊரடங்கு அப்பட்டமாகச் சட்ட முரணானது. மக்களின் அடிப்படைத் தேவைகளைக் கூட நிறைவு செய்யத் தவறியிருக்கும் கோட்டாவின் அரசை ஆட்சேபித்து மக்கள் சட்டரீதியாகத் தமது எதிர்ப்பைக் காட்டுவதற்கான அடிப்படை உரிமையை மீறும் ஒரு நடவடிக்கை இந்த ஊரடங்கு உத்தரவு என சட்டத்தரணிகள் சங்கம் கூறுகின்றது.

இந்த அறிவிப்பை எந்த அதிகாரத்தின் கீழ் பொலிஸ் மா அதிபர் விடுத்திருக்கின்றார் என அவரிடம் இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம் சவால் விடுத்துக் கேள்வி எழுப்பி உள்ளது.

இந்த ஊரடங்கு ஜனநாயக விரோதமானது; சட்ட முரணானது.

இலங்கையில் ஜனநாயகம் மற்றும் சமூக, அரசியல் ஸ்திரத்தன்மையையும் சர்வதேச மதிப்பையும் பொலிஸ் மாஅதிபரின் இந்த நடவடிக்கை தரம் குறைக்கிறது என்று சுட்டிக்காட்டி உள்ள இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம், இத்தகைய உரிமையைப் பறிக்கும் நடவடிக்கைகளுக்கு எதிராக எல்லா அமைதி வழி முறைகளிலும் கிளர்ந்தெழுந்து தங்கள் உரிமையை நிலை நிறுத்த போராடுமாறு சகல இலங்கை மக்களையும் அழைத்துள்ளது.

இந்தச் சட்ட விரோத ஊரடங்கை உடனடியாக வாபஸ் பெறுமாறும் அது பொலிஸ்மா அதிபரைக் கோரியுள்ளது.

இன்றைய நிலையில் இந்த ஊரடங்கு உத்தரவை பிறப்பித்துள்ளமையை ஒட்டி அவர் இரண்டு நெருக்கடிகளை எதிர்கொள்ளப் போகின்றார்.

ஒன்று – இப்படிப் பிரகடனப்படுத்தியமைக்கு எதிராக நிச்சயம் உயர் நீதிமன்றத்தில் வழக்கை அல்லது வழக்குகளைச் சந்தித்து அவர் பாடம் படிக்க நேரிடும் என்று தோன்றுகின்றது.

அடுத்தது – அவர் அறிவித்திருப்பதாகக் கூறப்படும் பொலிஸ் ஊரடங்கை மீறினர் என்ற பெயரில் சிவிலியன் யார் மீதும் பொலிஸார் நடவடிக்கை எடுத்தாலும், அது தொடர்பில் பொலிஸ்மா அதிபர் நீதிமன்றச் சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டியவராவார்.

இன்றைய நிலையில் சட்டத் தெளிவற்ற அல்லது சட்ட முரணான வழிகளில் இந்த அரசுக்கு முதுகு கொடுக்கப் போகும் அதிகாரிகள் நிச்சயம் நீதிமன்றத்திலும் பின்னரும் தமது அடாத்துச் செயலுக்கு பதில் சொல்ல வேண்டி நேரும் என்றே தோன்றுகின்றது.

இன்றைய நெருக்கடி முற்றுமானால் அரசு இணைய வலையமைப்பு மூலம் சமூக ஊடகங்களை முடக்கலாம் என்ற பேச்சும் உண்டு. அப்படி ஓர் உத்தரவு தொலைத் தொடர்பு சேவைகள் வழங்கும் நிறுவனங்களுக்கு நேற்று அனுப்பப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அத்தகைய உத்தரவுகள் அடங்கிய கடிதப் பிரதியும் சமூக ஊடகங்களில் நேற்று உலாவின. ஆனால் அது தவறான செய்தி எனப் பின்னர் மறுக்கப்பட்டது.

அப்படி சமூக ஊடகங்களை – வட்ஸ் – அப், வைபர், முகப்புத்தக செயலிகளை – அரசு முடக்கினாலும், 'விபிஎன்கள்' மூலம் குறுக்கு வழியில் அரசின் தடையையும் மீறி, அந்தச் சமூக ஊடகங்களைக் கையாள மக்கள் இப்போது நன்கு பழகிவிட்டார்கள். சமூக ஊடகத் தடை எவ்வளவு தூரம் காரிய சித்தியாகும் என்பது கேள்விக்குறியே.

எது, எப்படி என்றாலும் ஒன்று மட்டும் உண்மை. அது – கோட்டா அரசு பயந்து நடுங்கத் தொடங்கி விட்டது என்பதுதான்.

– மின்னல் –

## சிசுவின் சடலத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

பிள்ளை சேனை பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்து பையொன்றில் சுற்றிய நிலையில் சிசுவின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சிசுவைப் பிரசவித்த தாய் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு, திருகோணமலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கணவன் வெளநாடு சென்றுள்ள நிலையில், குறித்த பெண் கிண்ணியா குறிஞ்சாக்கேணியிலுள்ள தனது தாயின் வீட்டில் வசித்து வந்துள்ளார்.

இதன்போது, திடீர் சுகவீனமடைந்த அப்பெண் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில், உடைகள் அடங்கிய பையொன்றை மாமியாரின் வீட்டுக்கு உறவினர் ஒருவர் மூலமாக அனுப்பியுள்ளார்.

குழந்தையின் தாய் அனுப்பிய பையை அலுமாரியில் வைத்த மாமியார், மறுநாள் அதிலிருந்து துர்நாற்றம் வீசியதால் அதனைச் சோதனையிட்டுள்ளார்.

இதன்போது, பையில் சிசுவின் சடலம் இருப்பதை அறிந்து, பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

பொலிஸார் சிசுவின் சடலத்தை மீட்டு, பிரேத பரிசோதனைகளுக்காக வைத்தியசாலைக்கு அனுப்பியுள்ளனர்.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய பெண்ணைச் சீனன்குடா பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

## குழப்பம் விளைவித்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்நிலையில், ஒரு இளைஞர் குழுவினர் புதிதாக ஒரு புதிய வரிசையை ஏற்படுத்தியதுடன், நேற்று எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் விநியோகிக்கப்பட்டபோது தங்கள் வரிசையினருக்கே எரிபொருளை முதலில் வழங்க வேண்டும் எனத் தெரிவித்து சண்டையில் ஈடுபட்டனர்.

சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவந்திருந்ததுடன், சம்பவத்துடன் தொடர்புடைய மூவரைக் கைதுசெய்துள்ளதுடன், காரில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வாள்கள் மற்றும் பொல்லுகளையும் மீட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணையை ஓமந்தைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## நிலைகுலைந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

எடுக்கக்கூடிய ஒரு முடிவு அல்ல.

இந்நாட்டில் வாழும் பெரும்பாலான மக்கள் வரிசையில் நிற்கின்றனர். சிலர் இரண்டு மூன்று நாள்களாக வரிசையில் நிற்கின்றனர்.

குறிப்பாக மேல் மாகாணங்களில் நிலைமை மிகவும் மோசமாக உள்ளது. இதனால் வரிசையில் நிற்கும் மக்களைத் திக்குமுக்காட செய்யும் வகையில் பொலிஸ் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தமக்கு எதிராக சுனாமி போல் எழும் மக்களின் எதிர்ப்புக்கு அஞ்சிய அரசு வெறித்தனமாக நடந்து கொள்வதன் உடனடி விளைவுதான் இந்த அவசர பொலிஸ் ஊரடங்குச் சட்டமாகும்.

அரசின் நிகழ்ச்சி நிரலில் இது போன்ற சீர்குலைக்கும் அடக்குமுறை நடவடிக்கைகள் இன்னும் பல உள்ளன என்பதில் சந்தேகமில்லை.

இதுபோன்ற ஜனநாயகப் போராட்டங்களுக்கு எதிராக பொலிஸ்துறை இதற்கு முன்பு நீதிமன்றத்தை நாடியிருந்தாலும், நீதிமன்றம் மக்களின் உரிமைகளை ஏற்று அமைதியான போராட்டங்களை நடத்த அனுமதித்துள்ளதோடு, இந்நிலையில் போராட்டத்தை அடக்குவதற்கு முயற்சித்தால் அது பொலிஸ் துறை மற்றும் பாதுகாப்புப் படையினரால் மேற்கொள்ளப்படும் பாரியதொரு தவறாகும்.

பொலிஸ்துறை உள்ளிட்ட பாதுகாப்புப் படையினர் இதுபோன்ற ஊரடங்குச் சட்டத்தை விதிக்காமல் மக்களுக்காக முன்னின்று அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டியதையே மேற்கொண்டிருக்க வேண்டிய செயற்பாடாகும்.

ஜனநாயகப் போராட்டங்களுக்கு இந்தளவு அஞ்சும் அரசு வரலாற்றில் முன்னெப்போதும் இருந்ததில்லை என்றும், அரசின் இத்தகைய கோழைத்தனமான முயற்சிகள் மூலம் மக்களின் உற்சாகம் மேலும் பெருகும் என்றும் அரசுக்குச் சுட்டிக்காட்டுகின்றோம்.

அவ்வாறே, இந்தக் கொடுங்கோல் அரசை விரட்டியடிப்பதற்கான போராட்டத்தை அரசின் இத்தகைய சிறுப்பிள்ளைத்தனமான கோழைத்தன செயல்களால் தடுத்து நிறுத்த முடியாது என்பதையும் வலியுறுத்துகின்றோம் – என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## மைத்திரி - சம்பிக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அரசு அமைக்கப்படும் என்று 43 ஆம் படையணியின் பொதுச்செயலாளர் சம்பிக்க ரணவக்க எம்.பி. தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும், சம்பிக்க ரணவக்க உள்ளடங்கலான 43 ஆம் படையணி உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று நடைபெற்றது.

சர்வகட்சி அரசு உட்பட நான்கு பிரதான விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

இதன்போது ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட சம்பிக்க ரணவக்க,

சர்வகட்சி இடைக்கால அரசு அமைப்பதற்கான பேச்சுகள் இடம்பெற்று வருகின்றன. 113 உறுப்பினர்களின் ஆதரவு கிடைத்த பின்னர் அரசு நிறுவப்படும். அது நடக்கும் – என்றார்.

## சில தினங்களுக்குள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

விசேட அறிக்கையொன்றை வெளியிட்டே இவ்வாறு கூறியுள்ளார்.

நாடு தற்போது முகம்கொடுத்துள்ள நிலைமையில் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளோம். அந்தவகையில் பல்வேறு நாடுகளுடன் கலந்துரையாடி வருகின்றோம்.

இதன்படி சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுகள் வெற்றியடைந்து அதன் உதவிகள் விரைவில் கிடைக்கவுள்ளன.

இதேவேளை, அத்தியாவசியப் பொருள்கள், மருந்துகள், உரம், எரிவாயு மற்றும் எரிபொருள் என்பன எதிர்வரும் 12ஆம் திகதி முதல் கிடைக்கவுள்ளன – என்றும் அந்த அறிக்கையில் ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## தனியார் மருந்தக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

என அகில இலங்கை தனியார் மருந்தக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் சந்திக்க கங்கந்த தெரிவித்தார்.

நாட்டுமக்களின் மருந்துத் தேவையில் சுமார் 70 வீதமானவை தனியார் மருந்தகங்கள் மூலமாகவே விநியோகிக்கப்படுகின்றது எனவும் அவர் கூறினார்.

எனினும், மருந்தக ஊழியர்களின் போக்குவரத்துக்கும், மருந்துப்பொருள்களைக் கொண்டு செல்லும் வாகனங்களுக்கும் தேவையான எரிபொருள் இது வரை விநியோகிக்கப்படவில்லை எனவும் சந்திக்க கங்கந்த சுட்டிக்காட்டினார்.

இதனால், தனியார் மருந்தகங்களில் மருந்துப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது எனவும், அடையாளப் பணிப்பகிஷ்கரிப்பாக இன்று அனைத்து தனியார் மருந்தகங்களும் மூடப்படும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## ஜூலை 11...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

புதிய கட்டணத் திருத்தத்துக்கான வர்த்தமானி அரச அச்சகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது எனவும் ரயில்வே திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

## பொலிஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அரசுக்கு எதிராகக் கொழும்பில் இன்று நடைபெறவுள்ள மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தைத் தடுப்பதற்காகச் செய்யப்பட்டுள்ள சட்டவிரோத அறிவிப்பு ஆகும்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

கொழும்பு உள்ளிட்ட மேல் மாகாணத்தின் பொலிஸ் பிரிவுகள் பலவற்றில் நேற்றிரவு முதல் பொலிஸ் ஊரடங்குச் சட்டம் என்ற அறிவிப்பை பொலிஸ்மா அதிபர் ஊடாக அரசு விடுத்துள்ளது.

இது அரசுக்கு எதிராகக் கொழும்பில் இன்று நடைபெறவுள்ள மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தைத் தடுப்பதற்காக அதாவது போராட்டத்துக்கு மக்களை வராமல் தடுப்பதற்காகச் செய்யப்பட்டுள்ள சட்டவிரோத அறிவிப்பு ஆகும்.

ஏனெனில், 'பொலிஸ் ஊரடங்கு' என்று இலங்கையின் சட்டத்தில் எதுவுமே கிடையாது – என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் -
076 443 8622



காலைக்கதிர் Kalaikkathir

# கோட்டாபய - ரணில் அரசுக்கு எதிராக முன்முனைத் தாக்குதல்

★ சர்வக்கட்சி அரசுக்கான ஏற்பாடுகள் தீவிரம்.
★ 10 பேர்கொண்ட அமைச்சரவை — தலைமைத்துவச் சபை உருவாக்கம்.
★ செங்கடகல பிரகடனம் மகாநாயக்க தேரர்களிடம் கையளிப்பு.
★ இருப்பை தக்கவைக்க கோட்டா — ரணில் பிரயத்தனம்.
★ போராட்டத்துக்கு மத்தியில் ஊரடங்கு அமுல்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவையும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளடங்கலான அரசையும் பதவி விலகச் செய்வதற்கான ஜனநாயகப் போரில் – மும்முனைத்தாக்குதல்தொடுக்கப்பட்டுள்ளதால் கோட்டா – ரணில் அரசு கடும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. இதனால் அடுத்துவரும் நாள்களில் அரசியல் மாற்றங்கள் இடம்பெறுவதற்கான அறிகுறிகள் அரசியல் களத்தில் பிரகாசமாக தென்படுகின்றன.

'கோ ஹோம் கோட்டா' என்ற கோத்துடன் பொதுமக்கள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், தொழிற்சங்க பிரமுகர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் என மக்களின் ஒன்றிணைந்த சக்தி ஒரு புறத்திலும், மகாசங்கத்தினர், பேராயர் உட்பட சர்வமதத் தலைவர்கள் மறு புறத்திலும், எதிர்க்கட்சிகளின் கூட்டு தாக்குதல் என ஆட்சி கட்டமைப்புக்கு எதிரான மும்முனைத்தாக்குதல் தற்போது தீவிரமடைந்துள்ளது.

இந்நிலையில் தமது இருப்பைத் தக்கவைத்துக்கொள்வதற்காக ஜனாதிபதியும், பிரமரும் கடும் பிரயத்தனங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

மக்கள் சக்திக்கு பணிந்து, அரசு பதவி விலகினால் – அல்லது நாடாளுமன்றத்தின் அறுதிப்பெரும்பான்மையை பெற்று ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினால் – அடுத்ததாக மேற்கொள்ள வேண்டிய நகர்வுகள் சம்பந்தமாக ஆராய்வதற்காக எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில், நேற்று (08) விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் முற்போக்கு கூட்டணி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, முஸ்லிம் காங்கிரஸ், மக்கள் காங்கிரஸ், விமல் – வாசு உள்ளடங்கலான 10 கட்சிகளின் கூட்டு உட்பட எதிரணி பிரமுகர்கள் சந்திப்பில் பங்கேற்றிருந்தனர். ஜே.வி.பினர் கலந்து கொள்ளவில்லை.

சர்வக்கட்சி இடைக்கால அரசமைப்பதற்கான ஏற்பாடுகள் தொடர்பில் இதன்போது விரிவாக ஆராயப்பட்டது என தெரிவித்த ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார, ஜனாதிபதி பதவி விலகுவார் என்ற நம்பிக்கையையும் வெளியிட்டார்.

நாடாளுமன்றத்தில் 113 ஆசனங்களை பெறமுடியும் என உறுதிபட தெரிவித்த வாசு, இன்னும் ஒரு வாரமளவில் சர்வக்கட்சி அரசு அமையலாம் என்ற தகவலையும் மேற்படி கலந்துரையாடலின் பின்னர், ஊடகங்களிடம் தெரிவித்தார்.

10 பேர் கொண்ட அமைச்சரவை நிறுவப்படும். தேசிய தலைமைத்துவச் சபை அமைக்கப்படும். அதில் அங்கம் வகிப்பவர்கள் அமைச்சு பதவிகளை வகிக்க மாட்டார்கள், அதேபோல தேசிய ஆலோசனைக் குழுவொன்று அமைக்கப்படும். அதில் நிபுணர்கள், தொழிற்சங்க பிரமுகர்கள், சிவில் அமைப்பு பிரதிநிதிகள் ஆகியோர் இடம்பெறுவார்கள்.

113 ஐ விட ஆதரவு உள்ளது. மொட்டு கட்சியில் இருந்தும் சிலர் வருவார்கள். என்று நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

இன்றைய சந்திப்பின் கூட்டமைப்பின் சார்பில் சுமந்திரன் எம்.பி. பங்கேற்றிருந்தாலும், சர்வக்கட்சி அரசில் இணைவது சம்பந்தமாக தமது கட்சி இன்னும் இறுதி முடிவு எடுக்கவில்லை என அவர் தெரிவித்தார்.

அதேவேளை, நாடாளுமன்றத்தின் ஒத்துழைப்பு இல்லாமல் ஜனாதிபதியால் தனித்து செயற்படமுடியாது என சம்பிக்க ரணவக்க சுட்டிக்காட்டினார்.

**செங்கடகல பிரகடனம்**

இதற்கிடையில் சர்வக்கட்சி இடைக்கால அரசமைப்பதற்கு இடமளித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும், அவர் தலைமையிலான அரசும் பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி சர்வமதத் தலைவர்கள் இணைந்து நேற்று 'செங்கடகல' பிரகடனத்தை நிறைவேற்றியுள்ளனர்.

மகாசங்கத்தினரின் ஏற்பாட்டில் கண்டியில் நடைபெற்ற இதற்கான நிகழ்வில் பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையும், இந்து, இஸ்லாம் மதத் தலைவர்களும் பங்கேற்று பிரகடனத்தில் கையொப்பமிட்டனர். தொழிற்சங்க பிரமுகர்கள், சிவில் செயற்பாட்டாளர்களும் பிரகடனத்தில் கைச்சாத்திட்டனர்.

அதன்பின்னர் கலாநிதி ஓமல்பே சோபித தேரர் உள்ளிட்ட குழுவினர், செங்கலடக பிரடகனத்தை அஸ்கிரிய மற்றும் மல்வத்த பீடங்களின் மகாநாயக்க தேரர்களிடம் கையளித்தனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நிபந்தனையின்றி பதவி விலக வேண்டும், பொது வேலைத்திட்டத்தை உருவாக்குதல், சர்வக்கட்சி அரசமைத்தல் என 6 கோரிக்கைகள் குறித்த பிரடகனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி தலைமையிலான அரசைப் பதவி விலக வலியுறுத்தி நாளை நாடு தழுவிய ரீதியில் போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மேல் மாகாணத்தில் நீர்கொழும்பு, களனி, நுகேகொடை, கல்கிஸை, கொழும்பு வடக்கு, தெற்கு மற்றும் கொழும்பு மத்தி ஆகிய பொலிஸ் பிரிவுகளில் பொலிஸ் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

நேற்று இரவு 9 மணி முதல் மறு அறிவித்தல் வரை பொலிஸ் ஊரடங்கு சட்டம் அமுலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## மேல் மாகாணத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொழும்பு வடக்கு, கொழும்பு தெற்கு, கொழும்பு மத்தி, நுகேகொடை, கல்கிஸை, களனி, நீர்கொழும்பு ஆகிய பொலிஸ் பிரிவுகளில் பொலிஸ் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

பொலிஸ் ஊரடங்கு அமுலிலுள்ள பகுதிகள் ஊடாகப் பயணித்தல் முழுமையாகத் தடை செய்யப்பட்டுள்ளது என்றும் பொலிஸ்மா அதிபர் மேலும் தெரிவித்துள்ளார்.

'கோட்டா உடன் வீட்டுக்குப் போ' என்ற கோத்துடன் இன்று கொழும்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசுக்கு எதிராக மக்கள் தன்னெழுச்சிப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ள நிலையிலேயே பொலிஸ் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

## பருத்தித்துறைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எல்லைதாண்டி மீன்பிடியில் ஈடுபட்டிருந்த 12 இந்திய மீனவர்கள் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

அவர்கள் 12 பேரும் நேற்று பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில் அவர்களுக்கு 10 ஆண்டுகள் ஒத்திவைக்கப்பட்ட 3 ஆவடுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, அவர்கள் 12 பேரின் உடைமைகளும் திரும்ப வழங்கப்பட்டுள்ளன.

அவர்களின் படகு, தொழில் உபகரணங்கள் அரசுடமையாக்கப்பட்டுள்ளன.

## அரசுக்கு இறுதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குடிமக்களினதும் நம்பிக்கைகளைத் தகர்த்து ஒட்டுமொத்த நாட்டையும் மிகக் கடுமையானசோகத்துக்குள்தள்ளியுள்ள அரசுக்கு இறுதிச் செய்தியை வெளியிட வேண்டிய தருணம் வந்துவிட்டது. எனவே, இன்றைய மாபெரும் ஜனநாயகப் போராட்டத்தின் வலிமையுடன் அரசுக்கு இறுதிச் செய்தியை வழங்க நாம் அனைவரும் ஓரணியில் திரளுவோம்.

இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக கோட்டாபய அரசின் ஆட்சியின் மூலம் நாடு ஒரு துயரமான நிகழ்காலத்தையும் இருண்ட எதிர்காலத்தையும் பெற்றுள்ளது. இதற்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி இடைவிடாப் போராட்டத்தில் ஈடுபட்டதால், நடுநிலையான சிவில் சமூகத்தில் அரசுக்கு எதிராக பலத்த எதிர்ப்பும் எழுந்தது.

இன்று அதன் தீர்க்கமான கட்டத்துக்கு வந்துள்ளோம். இன்றைய மக்கள் போராட்டத்துக்கும், மக்கள் சக்திக்கும், மக்கள் கூட்டணிக்கும் முழு ஆசிகளையும், ஆதரவையும் வழங்குவோம்.

அரசின் தந்திரம் மற்றும் கோழைத்தனமான நடவடிக்கைகளில் சிக்கிக்கொள்ளாமல், இன்றைய மாபெரும் போராட்டத்தை வெற்றிப் பாதைக்கு இட்டுச் செல்வோம். இந்த ஜனநாயகப் போராட்டத்துக்கு நமது முழுப் பலத்தையும் கொடுப்பது நம் அனைவரினதும் பொறுப்பும் கடமையும் ஆகும் – என்றுள்ளது.

## விம்பிள்டன் டென்னிஸ் தொடரிலிருந்து விலகினார் நடால் இறுதிப் போட்டிக்கு கிர்கியோஸ் தகுதி



விம்பிள்டன் டென்னிஸ் தொடர் லண்டனில் நடைபெற்றுவருகிறது. இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவுக்கான காலிறுதி ஆட்டத்தில், ஸ்பெயினின் வீரர் ரபேல் நடால் அமெரிக்காவின் டெய்லர் பிட்சை 3 – 6, 7 – 5, 3 – 6, 7 – 5, 7 – 6 என்ற செட் கணக்கில் போராடி வென்று அரையிறுதிக்குள் நுழைந்தார். இந்தப் போட்டியின்போது நடாலுக்கு வயிற்றுப்பகுதியில் வலி ஏற்பட்டது. சிறிது நேர மருத்துவ சிகிச்சைக்குப் பிறகு களமிறங்கி போட்டியில் வெற்றி பெற்றிருந்தார்.

இந்த வெற்றியையடுத்து, இன்று நடைபெறவிருந்த அரையிறுதி ஆட்டத்தில் ஆஸ்திரேலிய வீரர் நிக் கிர்கியோசுடன் நடால் மோதவிருந்தார். ஆயினும், அந்தப் போட்டியில் இருந்து விலகுவதாக ரபேல் நடால் அறிவித்திருக்கிறார். வயிற்றுத் தசையில் ஏற்பட்ட காயம் காரணமாக அரையிறுதியில் விளையாடவில்லைஎன்றுஅவர்குறிப்பிட்டிருக்கிறார்.

போட்டிக்கு முன்பாக ஊடக நிருபர்களைச் சந்தித்த நடால், துரதிர்ஷ்வசமாக நான் போட்டியில் இருந்து வெளியேற வேண்டிய சூழல் ஏற்பட்டுவிட்டது. காலிறுதி ஆட்டத்தில் நான் வயிற்று வலியால் அவதிப்பட்டதை அனைவரும் பார்த்தனர். அடிவயிற்றுத் தசைப்பகுதியில் காயம் ஏற்பட்டிருப்பது உறுதியாகியுள்ளது.

அரையிறுதியில் இருந்து விலகும் முடிவை நாள் முழுவதும் யோசித்தே எடுத்திருக்கிறேன். எனது வாழ்க்கையில் மிகவும் கடினமான சூழ்நிலையில் பல முயற்சிகளை நான் தொடர்ந்திருந்தாலும், தற்போது தொடர்ந்து விளையாடினால் காயம் மோசமாகிவிடும் என்பது வெளிப்படையானது. இதைச்சொல்வதில் எனக்கு மிகவும் வருத்தமாக இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் என்னால் இரண்டு போட்டிகளில் வெற்றிபெற முடியாது. சரியான வேகத்தில் என்னால் விளையாட முடியவில்லை என்பது மட்டுமல்ல சாதாரண செயல்பாடுகளைக்கூட செய்ய முடியாதுள்ளது என்பதால்தான் இந்த முடிவை எடுத்தேன், என்று தெரிவித்திருக்கிறார்.

ரபேல் நடால், விலகியதையடுத்து ஆஸ்திரேலிய வீரர் நிக் கிர்கியோஸ் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றார். இன்று நடக்கும் மற்றொரு அரையிறுதியில் உலகத்தரவரிசையில் முதல் நிலையிலுள்ள செர்பியாவின் ஜோகோவிச், இங்கிலாந்தின் கேமரூன் நோரி இருவரும் பலப்பரீட்சை நடத்தவிருக்கிறார்கள்.

பெண்கள் ஒற்றையர் பிரிவில் நாளை நடக்கும் இறுதிப்போட்டியில் ஆன்ஸ் ஜாபியர் (துனிசியா) – ரைபதினா (கஜகஸ்தான்) மோதுகிறார்கள். இருவரும் முதல் முறையாக கிராண்ட்சிலாம் இறுதிப் போட்டிக்கு முன்னேறி உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பல்கலை மாணவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தாக்குதல் நடத்தப்பட்டது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசுக்கு எதிராக நாடெங்கும் இன்று நடத்தப்படவுள்ள ஆர்ப்பாட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து களனிப் பல்கலைக்கழகத்தில் இருந்து நேற்று மாலை மாணவர்கள் ஆர்ப்பாட்டப் பேரணியை நடத்தியிருந்தனர்.

இவர்கள் கொழும்பு – கோட்டை பகுதியில் உலக வர்த்தக மைய கட்டடத் தொகுதிக்கு அருகில் உள்ள வீதித் தடையை உடைத்துக்கொண்டு முன்னால் செல்ல முயன்றபோது அவர்கள் மீது நீர்த்தாரைத் தாக்குதல் மற்றும் கண்ணீர்ப்புகைக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதனால் அந்தப் பகுதியில் பொலிஸாருக்கும் மாணவர்களுக்கும் இடையே மோதல் நிலைமை ஏற்பட்டது.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## கோட்டாவின் கொடுங்கோன்மை

**மக்கள் ஆதரவை – செல்வாக்கை – இழந்து விட்ட கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிப்பீடம் அடக்குமுறை மூலம் தனது அதிகாரத்தைத் தொடர்ந்து மேற்கொண்டு, நாட்டைக் குட்டிச் சுவராக்கிக் கெடுத்து, நாசப்படுத்தி விட்டுத்தான் அகலுவது என்று கங்கணம் கட்டி நிற்கின்றது.**

**மேல் மாகாணத்தில் அது நேற்றிரவு 9 மணி முதல் பிரகடனப்படுத்தியிருக்கும் 'பொலிஸ் ஊரடங்கு' (?) அதையே நிரூபித்து நிற்கின்றது.**

**அது மட்டுமல்ல, அந்த ஊரடங்கு அதற்கு அப்பாலும் பல விடயங்களைச் சொல்லாமல் சொல்லுகின்றது.**

**வரலாற்றில் மிக மோசமான – பின்னடைவான – நெருக்கடி நிலையை நாடு எதிர்கொண்டிருக்கின்றது. கடனிறுக்க முடியாது தோற்றுப் போன நாடு என்ற கீழ்மை நிலைக்குள் கோட்டாவின் சீர்கெட்ட நிர்வாகம் நாட்டைத் தள்ளியுள்ளது. மீள முடியாத கஷ்டத்துக்குள் – துன்பத் துக்குள் – மக்கள் சிக்குப்படும் அவலம் நேர்ந்துள்ளது.**

**கோட்டா நிர்வாகத்தின் மோசமான நடவடிக்கைகளினால் நாட்டின் ஒவ்வொரு பிரஜையின் வாழ்வும் எதிர்காலமும் கேள்விக்குறியாகி விட்டது.**

**கோட்டாவையும் அவர் ஆட்சியையும் தொலைப்பதுதான் – துரத்தியடிப்பதுதான் – நாடு மீள ஒரே மார்க்கம் என்ற மாறா முடிவுக்கு மக்களைத் தள்ளி விட்டது கோட்டாபயவின் எதேச்சாதிகார நிர்வாகம்.**

**நெருக்கடியின் உச்சியில், என்ன பண்ணியாவது இந்த ஆட்சிப் பீடத்தைத் தொலைத்தால்தான் மீட்சி என்ற இறுதி முடிவுக்கு மக்களில் பெரும்பான்மையானோர் வந்து விட்டனர் என்பது கண்கூடு.**

**மக்களின் அந்தக் கருத்தியலை ஒன்றுபட்டு வெளிப்படுத்தச் செய்து, இந்த ஆட்சியாளர்களைத் துரத்துவதற்காக இன்று தலைநகரில் எதிர்க்கட்சிகள் ஏற்பாடு செய்த எதிர்ப்பு நடவடிக்கைகள் பெருத்த எடுப்பில் கட்டவிழும் என எதிர்பார்க்கப்பட்ட போது அதற்கு முகம் கொடுக்க அஞ்சி, ஊரடங்கைப் பிறப்பித்திருக்கின்றது கோட்டா அரசு.**

**மக்கள் செல்வாக்கை – ஆதரவை – தமது அரசு இழந்து விட்டது, மக்கள் சீற்றத்தோடு கோபாவேச எதிர்ப்புடன் இருக்கின்றார்கள் என்பதை ஒப்புக் கொள்ளும் நடவடிக்கையே இந்த ஊரடங்கு.**

**மக்களின் கோபம் அரசு முகம் கொடுக்க முடியாத சீற்ற எல்லையைத் தாண்டி விட்டது என்பதன் வெளிப்பாடும் கூட இது.**

**"அமைதியான முறையில் மக்கள் போராட்டம் செய்வதும், தங்கள் எதிர்பபைக் காட்டுவதும் அவர்களின் உரிமை. அதைக் குழப்பாதீர்கள். தடுக்காதீர்கள். ஒத்துழையுங்கள். அத்தகைய அமைதி வழிப் போராட்டத்துக்கு பாதுகாப்புக் கொடுங்கள்" – என்றெல்லாம் அமெரிக்கத் தூதுவர் செய்திகள் விடுக்கின்றார்.**

**ஆனால், நாட்டின் அரசோ ஊரடங்குச் சட்டம் பிறப்பித்து, மக்களின் அடிப்படை உரிமையை – ஜனநாயக உரித்தை – தமது எதிர்ப்பை ஜனநாயக வழியில் காட்டும் மக்களின் உணர்வை – அடக்கு முறை மூலம் முழுவதுமாகக் கட்டுப்படுத்த விழைகின்றது.**

**ஜனநாயக வழியில் – அமைதி வழியில் – மக்கள் தமது எதிர்ப்பைக் காட்டும் வழி முறைகள் இப்படி எதேச்சாதிகாரமாக அடக்கப்படுமானால், மக்கள் வேறு – ஆபத்தான – மாற்று வழிகளை நாடுவது தவிர்க்க முடியாததாகும். அப்படி ஒரு நிலைக்கு தனது அதிகார வெறி நடவடிக்கை மூலம் நாட்டை இட்டுச் செல்கின்றது கோட்டாவின் கொடூர அரசு.**

# ஜனாதிபதி கோட்டாபயவை பதவி நீக்கி சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்போம்!

## நளின் பண்டார கூளுரை



அரசாங்கத்துக்கு எதிராக இன்று (சனிக்கிழமை) முன்னெடுக்கப்படவுள்ள ஆர்ப்பாட்டத்திற்கு ஐக்கிய மக்கள் சக்தி முழுமையான ஆதரவை வழங்கும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பதவியிலிருந்து விலகச் செய்து அனைவரும் ஏற்றுக் கொள்ளும் சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்க வேண்டும். சர்வகட்சி அரசாங்கத்துக்கு எம்மால் விடுக்கப்பட்ட அழைப்பை ஜே.வி.பி. மறுத்துள்ளமை பிரச்சினைக்குரிய விடயமாகும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் (வியாழக்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

உக்ரைன் மீது குண்டு தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுவதைப் போன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் மீது பொலிஸார் கண்ணீர்ப்புகை பிரயோகத்தை மேற்கொள்கின்றனர்.

ஹிருணிகா என்ற பெயரைக் கேட்டதும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு பயம் ஏற்படுகிறது. அரசியல் நோக்கத்துக்காக நாம் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்கவில்லை. கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகாமல் அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த முடியாது.

எனவே அவரைப் பதவியிலிருந்து நீக்கி சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்க வேண்டும். இதற்காக நாம் நாடாளுமன்றத்திலுள்ள சகல கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்திருக்கின்றோம்.

எனினும் ஜே.வி.பி. அந்த அழைப்பை நிராகரித்துள்ளது. உண்மையில் அவர்களது நிகழ்ச்சி நிரல் என்பது எமக்குப் புரியவில்லை. 9 ஆம் திகதி முன்னெடுக்கப்படவுள்ள ஆர்ப்பாட்டத்துக்கு முழுமையான ஆதரவை வழங்குவோம். 9 ஆம் திகதி கோட்டாபய ராஜபக்ஷவை பதவியிலிருந்து விலகச் செய்ய வேண்டும். அதனைத் தொடர்ந்து அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்க வேண்டும்.

மக்கள் எதிர்ப்புக்களால் அரசியலிலிருந்து பின்வாங்கிய பஸில் ராஜபக்ஷவிற்காகவே தம்மிக்க பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார். ஆரம்பத்தில் மக்கள் எதிர்ப்புக்கள் தீவிரமடைந்த போது ரணில் என்ற இரும்பு காவலரணை அமைத்து ராஜபக்ஷ குடும்பம் தன்னைப் பாதுகாத்துக் கொண்டது.

தற்போது ரணில் மீதான எதிர்ப்புக்களும் வலுப்பெற்றுள்ளமையால், அவருக்கு பதில் வேறு ஒருவரை நியமிப்பதற்கு பஸில் திட்டம் தீட்டிக் கொண்டிருக்கிறார்.

சஜித் பிரேமதாஸ தலைமையிலான அரசாங்கம் அமைக்கப்பட்டால், நிச்சயம் ராஜபக்ஷக்ஷக்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்படும் என்ற அச்சத்தாலேயே அவர்கள் எமக்கு வாய்ப்பளிக்க அஞ்சுகின்றனர்.

ஜே.வி.பி. சர்வகட்சி அரசமைப்பதற்கான அழைப்பை நிராகரிக்கின்றமை பிரச்சினைக்குரிய விடயமாகும். அநுரகுமார திஸாநாயக்க பிரதமர் பதவியை ஏற்பதற்குத் தயாராக உள்ளார் எனத் தெரிவித்துள்ளார்.

அவர் உள்ளடங்களாக 3 நாடாளுமன்ற உறுப்பினர்களை மாத்திரம் வைத்துக் கொண்டு எவ்வாறு அரசாங்கத்தை அமைக்க முடியும்? அதற்கு ஏனைய கட்சிகளின் ஒத்துழைப்பும் அவசியமாகும் என்பதை அவர் உணர வேண்டும்.

தற்போது சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கான சிறந்த அடித்தளம் இடப்பட்டுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அரசாங்கத்திலிருந்து விலகி சுயாதீனமாக செயற்படும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசாங்கத்துக்குள்ளிருக்கும் ஆனால் ராஜபக்ஷ குடும்பத்தை விரும்பாத உறுப்பினர்கள், கோப் குழு உறுப்பினர் சரித ஹேரத் மற்றும் சம்பிக்க ரணவக்க உள்ளிட்ட சிரேஷ்ட உறுப்பினர்கள் இதற்கு ஒத்துழைப்பு வழங்கத் தயாராக உள்ளனர். – என்றார்.

# நாட்டில் எரிவாயு நெருக்கடிக்கு பஸிலும், கோட்டாவுமே பொறுப்பு!

## புபுது ஜாகொட குற்றச்சாட்டு

போதிய டொலர்கள் கிடைக்காத காரணத்தால் எரிபொருள் நெருக்கடி ஏற்பட்ட போதிலும், பஸில் ராஜபக்ஷ நிதியமைச்சராக இருந்து எடுத்த முடிவால் நாட்டில் எரிவாயு நெருக்கடி ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னிலை சோசலிச கட்சியின் கல்விச் செயலாளர் புபுது ஜாகொட இதனைத் தெரிவித்துள்ளார்.

எரிபொருள், எரிவாயு உள்ளிட்ட பல நெருக்கடிகளால் நாட்டு மக்கள் அவதியுறுகின்றனர் எனவும், அதிகாரிகளின் சீரற்ற தீர்மானங்களாலேயே எரிவாயு நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகவும் ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர் –

லிற்றோ நிறுவனம் நாட்டுக்கு எரிவாயு வழங்குவதற்காக ஓமன் நிறுவனத்துடன் பெப்ரவரி 28, 2020 முதல் பெப்ரவரி 28, 2023 வரை ஒப்பந்தம் செய்து கொண்டது. எனினும், ஒக்ரோபர் 6, 2021 அன்று, பஸில் ராஜபக்ஷ நிதி அமைச்சராகப் பதவியேற்றார், பெப்ரவரி 28 அன்று, ஒப்பந்தம் இடைநிறுத்தப்பட்டது.

ஒப்பந்தம் செய்யப்பட்ட அந்த வர்த்தக நிறுவனம் அப்போதைய நிதியமைச்சின் செயலாளரிடம் இது தொடர்பாக விசாரணை நடத்தியது. அந்தக் கடிதம் என்னிடம் உள்ளது. அவன்கார்ட் நிறுவனத்துடன்




இணைந்த நிறுவனம் ஒன்றின் மூலம் எரிவாயு பெற முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

ஆனால் பின்னர், இந்த இரு நிறுவனங்களிடமிருந்தும் எரிவாயு வாங்க ஏற்பாடு செய்யவில்லை. அப்போதுதான் லிற்றோ நிறுவனத்தின் முன்னாள் தலைவர் தொர ஜயசிங்க அதிக விலைக்கு எரிவாயுவை வாங்க முயற்சிக்கின்றார்.

இவ்வாறு எரிவாயு கொள்வனவு செய்தால் ஒரு கோடி ரூபா நட்டம் ஏற்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார். அவர் உண்மைகளை வெளிப்படுத்திய போதிலும், அவ்வாறு செய்வது யார் என்பதை ஜனாதிபதி ஆராயவில்லை.

அவ்வாறு செய்திருந்தால் நாடு எரிவாயுவைப் பெற இவ்வளவு காலம் காத்திருக்க வேண்டியதில்லை. எனவே, நாட்டின் எரிவாயு நெருக்கடியை மேலும் மோசமாக்குவதற்கு ஜனாதிபதியும் பொறுப்பு என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# தலாய் லாமாவுக்குப் பிறந்தநாள் வாழ்த்து கூறியமைக்காக மோடி மீது சீனா காய்ச்சல்



திபெத் ஆன்மீகத் தலைவர் தலாய் லாமாவின் 87 ஆவது பிறந்தநாளில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவருக்கு வாழ்த்து தெரிவித்தமையை சீனா நேற்று முன்தினம் வியாழக்கிழமை விமர்சித்துள்ளது.

சீனாவின் உள் விவகாரங்களில் தலையிடுவதற்கு திபெத் தொடர்பான பிரச்சினைகளைப் பயன்படுத்துவதை இந்தியா நிறுத்த வேண்டும் என்றும் சீனா கூறியுள்ளது.

மோடியின் வாழ்த்து குறித்து, ஊடகவியலாளர் சந்திப்பில், கேள்விக்கு பதிலளித்த சீன வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ஜாவோ லிஜியன் “14 ஆவது தலாய் லாமாவின் நடவடிக்கை சீன எதிர்ப்பு பிரிவினைவாத போக்கு என்பதை இந்தியத் தரப்பு முழுமையாக ஒப்புக் கொள்ள வேண்டும்” என்றார்.

“இந்தியா சீனாவுக்கான தனது அர்ப்பணிப்பிற்குக் கட்டுப்பட வேண்டும். அத்துடன் விவேகத்துடன் பேச வேண்டும் மற்றும் செயல்பட வேண்டும். சீனாவின் உள் விவகாரங்களில் தலையிட திபெத் தொடர்பான பிரச்சினைகளைப் பயன்படுத்துவதை இந்தியா நிறுத்த வேண்டும், என்றும் ஜாவோ கூறினார்.

அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் (வெளிவிவகார அமைச்சர்) பிளிங்கன் தலாய் லாமாவுக்கு பிறந்தநாள் வாழ்த்துகளைத் தெரிவித்தமையை விமர்சித்த ஜாவோ, ‘திபெத் விவகாரங்கள் சீனாவின் உள் விடயம். இதில் வெளிநாட்டுத் தலையீட்டுக்கு இடமேயில்லை. 14 ஆவது தலாய் லாமாவுடன் எந்த நாடும் ஈடுபடுவதை சீனா உறுதியாக எதிர்க்கிறது” – என்றார்.

‘திபெத் தொடர்பான பிரச்சினைகளின் முக்கியமான மற்றும் உணர்திறன் தன்மையை அமெரிக்கா முழுமையாகப் புரிந்து கொள்ள வேண்டும். சீனாவின் முக்கிய நலன்களுக்கு மதிப்பளிக்க வேண்டும். தலாய் லாமா குழுவின் சீன எதிர்ப்புப் பிரிவினைவாதத் தன்மையை தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். திபெத் தொடர்பான பிரச்சினைகளில் அமெரிக்கா சீனாவுடனான தனது உறுதிப்பாட்டைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று நாங்கள் அமெரிக்கத் தரப்பைக் கேட்டுக் கொள்கிறோம். தலாய் லாமாவுடன் எந்த வடிவத்திலும் ஈடுபடுவதை நிறுத்துங்கள். வெளி உலகிற்கு தவறான சமிக்ஞைகளை அனுப்புவதை நிறுத்துங்கள்’ – என்று அவர் மேலும் கூறினார்.

நீண்ட காலமாக, திபெத் வளர்ச்சியடைந்து வருகின்றது. பொருளாதார வளர்ச்சி, சமூக நல்லிணக்கம்,ஸ்திரத்தன்மை உறுயியாகப் பேணப்படுகின்றன. திபெத்திய கலாச்சார மரபுகள் நன்கு பாதுகாக்கப்பட்டு வருகின்றன. – என்றார் அவர்.

திபெத்தில் உள்ள பல்வேறு இனப் பின்னணியைச் சேர்ந்தவர்கள் தங்கள் சொந்த பிராந்தியத்தையும் பேசும் மொழியையும் பயன்படுத்தவும் வளர்க்கவும் உரித்தளிக்கப்பட்டுள்ளனர். மத சுதந்திரம் மற்றும் சுதந்திரமான உரிமையைப் பெற்றுள்ளனர். இதற்கு சர்வதேச சமூகம் சாட்சியமாகின்றது. – என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சீன எதிர்ப்புக்கு இந்தியா பதிலடி

திபெத்திய மதத் தலைவர் தலாய் லாமாவிற்கு பிரதமர் நரேந்திர மோடி பிறந்த நாள் வாழ்த்து தெரிவித்ததற்கு சீனா எதிர்ப்பு தெரிவித்துள்ளது. இதற்கு பதிலடி அளித்துள்ள மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகம், தலாய் லாமா இந்தியாவின் விருந்தாளி எனக் கூறியுள்ளது.

புத்த மத தலைவர் தலாய் லாமா, கடந்த 6 ம் திகதி 87 வது பிறந்த நாள் கொண்டாடினார். அவருக்கு பிரதமர் மோடி தொலைபேசி மூலம் பிறந்த நாள் வாழ்த்து தெரிவித்தார். இதனை அறிக்கையில் தெரிவித்திருந்த மோடி, அவர் நீண்ட நாள்கள் ஆரோக்கியத்துடன் வாழ வேண்டிக் கொள்கிறேன் என கூறியுள்ளார். கடந்த ஆண்டும் மோடி வாழ்த்து தெரிவித்திருந்தார்.

இதைக் கண்டிக்கும் விதத்தில் சீன வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் கருத்து வெளியிட்டிருந்தார்.

அதற்குப் பதிலடி கொடுத்துள்ள இந்திய மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் அரிந்தம் பக்சி, ‘தலாய் லாமாவை, இந்தியாவில் கௌரவ விருந்தினராகவும், அவரை பின்பற்றுவோரின் எண்ணிக்கை அதிகமாக உள்ள மரியாதைக்குரிய தலைவராகவும் கருதுவது, இந்திய அரசின் நிலையாய கொள்கையாகும். அவரது பிறந்த நாளை இந்தியாவிலும், வெளிநாட்டிலும் ஏராளமானோர் கொண்டாடுகின்றனர். தலாய் லாமாவிற்கு மோடி பிறந்த நாள் வாழ்த்து தெரிவித்ததை இந்த சூழலில் பார்க்க வேண்டும்’. – இவ்வாறு அவர் கூறினார்.

# ஆங்கிலேயர் அறிமுகப்படுத்திய கல்வி; இந்தியா தனக்கேற்ப மாற்ற வேண்டும்!

## பிரதமர் மோடி கருத்து



“ஆங்கிலேயர்கள் தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பணியாளர் வர்க்கத்தை உருவாக்கும் வகையில் இந்தியாவில் கல்வி முறையை அறிமுகப்படுத்தினர். அதில் இன்னும் நிறைய மாற்றம் தேவைப்படுகிறது என்று பிரதமர் நரேந்திர மோடி பேசினார் என, ‘தினமனி’ நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

தேசிய கல்விக் கொள்கையை நடைமுறைப்படுத்துவது தொடர்பான 3 நாள் மாநாடு, வாரணாசியில் வியாழக்கிழமை தொடங்கியது. இதனைத் தொடக்கி வைத்துப் பேசிய போது பிரதமர் மோடி மேலும் கூறியவை வருமாறு:–

இந்தியாவில் வேலைவாய்ப்புகளை அளிப்பதற்காக மட்டுமே கல்வி முறை உருவாக்கப்பட்டது. ஆங்கிலேயர்கள் தங்கள் ஆட்சிக் காலத்தில் தங்களுக்கான வேலைகளை செய்யும் பணியாளர்களை உருவாக்கும் வகையில் இந்தியாவில் ஒரு கல்வி முறையை அறிமுகப்படுத்தினர். நாடு சுதந்திரம் அடைந்த பிறகு நமது கல்வி முறையில் சிறிதளவு மாற்றம் செய்யப்பட்டது. ஆனால், இன்னும் ஏராளமான மாற்றங்கள் செய்யப்பட வேண்டியுள்ளது.

நாட்டை வளர்ச்சிப் பாதையில் முன்னெடுத்துச் செல்வதற்குத் தேவையான மனித வளத்தை உருவாக்கும் வகையில் நமது கல்வி முறையை மாற்ற வேண்டும்.

இந்திய மொழிகளில் கல்வி கற்பதற்கான வாய்ப்புகளை தேசிய கல்விக் கொள்கை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. உலகின் கல்வி மையமாக இந்தியா உருவாகும் என்று நான் திடமாக நம்புகிறேன் – என தெரிவித்தார் என அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலாப நோக்கில் மக்கள் மீது அதிக சுமை சுமத்தப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது

## இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு தெரிவிப்பு

எரிபொருள் விலையேற்றம் முரண்பட்ட தன்மையில் உள்ளது. இலாபம் பெறும் நோக்கத்துக்காக மக்கள் மீது அதிக சுமை சுமத்தப்படுவதை ஏற்க முடியாது என்ற காரணத்தால் நாட்டுப் பிரஜை என்ற ரீதியில் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்ய தீர்மானித்துள்ளேன் என இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்தார்.

இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

எரிபொருள் விலை கடந்த ஒன்றரை மாதகாலப்பகுதியில் அதிகரிக்கப்பட்டுள்ளமை தொடர்பாக சிக்கல் நிலை காணப்படுகிறது.

நாட்டின் மின்கட்டமைப்பு தொடர்பிலான தீர்மானங்களை முன்னெடுக்கும் அதிகாரம் இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவிற்கு உள்ள காரணத்தால் எரிபொருள் விலையேற்றம் தொடர்பாக அதிக அவதானம் செலுத்தியுள்ளோம்.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா ஐ.ஓ.சி நிறுவனம் கடந்த இரண்டு மாதகாலமாக இறக்குமதி செய்த எரிபொருள் தொடர்பிலான தரவுகளை முழுமையாகப் பரிசீலனை செய்து கடந்த ஒன்றரை மாத காலப்பகுதியில் எரிபொருள் விலையேற்றம் முறையற்ற வகையில் அதிகரிக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் ஒரு லீற்றர் 92 ஒக்டேன் ரக பெற்றோல் இறக்குமதிக்கு சுங்க வரி அடங்கலாக 298 ரூபாவை செலவு செய்து,ஒரு லீற்றர் பெற்றோலை 470 ரூபாவிற்கு விற்பனை செய்கிறது. மறுபுறம் ஒரு லீற்றர் 95 ரக பெற்றோல் இறக்குமதிக்கான மொத்த செலவு 303 ரூபாவாக காணப்படும் பட்சத்தில் அதன் விலை 550 ரூபாவாகக் காணப்படுகிறது.

ஓட்டோ டீசல் இறக்குமதிக்கான செலவு 112 ரூபாவாகக் காணப்பட்ட போதும் விற்பனை விலை 460 ரூபாவிற்கும், சுப்பர் டீசலுக்கான செலவு வரி அடங்களாக 115 ரூபாவாகக் காணப்பட்ட போது விற்பனை விலை வரி அடங்களாக 520 ரூபாவாகக் காணப்படுகிறது. ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் இறக்குமதியின் போது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 471 ரூபாவை செலவிடுவதாக வலுசக்தி அமைச்சர் குறிப்பிட்டுள்ளமை அடிப்படையற்றது. ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் இறக்குமதிக்கு 252 ரூபா மாத்திரமே செலவிடப்படுகிறது.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம், மின்சார சபைக்கு ஒரு லீற்றர் போர்னஸ் எண்ணெயை 419 ரூபாவிற்கு வழங்குகிறது. ஆனால் ஒரு லீற்றர் போர்னஸ் எண்ணெய் 175 ரூபாவிற்கு இறக்குமதி செய்யப்படுகிறது.

எரிபொருள் விலையேற்றம் முறையற்ற வகையில் காணப்படுகிறது. நிறுவனங்கள் இலாபம் பெறும் நோக்கில் மக்கள் மீது சுமை சுமத்தப்படுகிறது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நட்டமடைகிறது எனக் குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

எரிபொருள் விலையேற்றத்தில் உள்ள முரண்பாடான தன்மை தொடர்பில் நாட்டு பிரஜை என்ற ரீதியில் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடளிக்கத் தீர்மானித்துள்ளேன்.

பல விடயங்களை கோப் குழுவில் முன்வைத்துள்ளேன். எரிபொருள் விலையேற்றம் தொடர்பில் ஆணைக்குழு குறிப்பிட்ட விடயங்களை விமர்சிக்கும் அரசியல்வாதிகளுக்கு இந்த விடயம் தொடர்பில் தெளிவற்ற தன்மை உள்ளதை விளங்கிக் கொள்ள முடிகிறது. – என்றார்.

# ராஜபக்ஷக்களிடமிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கான இறுதிப் போராட்டமாக 9 ஆம் திகதி அமைய வேண்டும்!

## அனைவருக்கும் ஹிருணிகா அழைப்பு

ராஜபக்ஷக்களிடமிருந்து நாட்டை மீட்பதற்கான இறுதி போராட்டமாக 9 ஆம் திகதி (இன்று) போராட்டம் அமைய வேண்டும்.



புறக்கோட்டை ரயில் நிலையத்துக்கு அருகில் ஐக்கிய மக்கள் சக்தி ஆதரவாளர்கள் அனைவரையும் ஒன்று கூடுமாறு அழைப்பு விடுப்பதாக ஐக்கிய மகளிர் சக்தியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஹிருணிகா பிரேமசந்திர தெரிவித்தார்.

புதனன்று ஜனாதிபதி மாளிகைக்குள் நுழைந்ததைப் போன்று, மீண்டுமொரு முறை நுழைந்து பலவந்தமாகவேனும் உட்பிரவேசித்து ஜனாதிபதியை சந்தித்து பதவி விலகுமாறு கோருவதற்கு அனைத்து பெண்களுக்கும் அழைப்பு விடுக்கிறேன் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் (வியாழக்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்–

இன்று (சனிக்கிழமை) முற்பகல் புறக்கோட்டை ரயில் நிலையத்துக்கு அருகில் ஐக்கிய மக்கள் சக்தி ஆதரவாளர்கள் அனைவரையும் ஒன்று கூடுமாறு அழைப்பு விடுக்கின்றோம்.

இதுவே ராஜபக்ஷக்களிடமிருந்து நாட்டை மீட்பதற்கான இறுதி போராட்டமாக அமைய வேண்டும். இந்த ஆர்ப்பாட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தி, ஜே.வி.பி. மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என அனைத்துக் கட்சிகளும் ஒரு பாரிய சுவராக ஒன்றிணைய வேண்டும்.

இதனை எவராலும் தோல்வியடையச் செய்ய முடியாது. காரணம் தற்போதுள்ள நிலைமையில் எந்தக் கட்சியாலும் தனித்து எதனையும் செய்ய முடியாது.

குறுகிய காலத்துக்கு சகல தரப்பினரும் தமது அரசியல் கொள்கைகளிலிருந்து விலகி, மக்களுக்கான ஒருமித்த மனதுடன் செயற்பட வேண்டும். கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகும் வரை எந்தவொரு கட்சியாலும் ஆட்சியமைக்க முடியாது.

இந்தப் போராட்டத்தின் பயனை மக்கள் அடைய வேண்டும். மாறாக ஒரு கட்சி ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்யும் போது, ஏனைய கட்சிகள் அதனை விமர்சித்துக் கொண்டிருக்கக் கூடாது.

கோட்டாபய ராஜபக்ஷ அனைவருக்கும் பொது எதிரி ஆவார். எனவே அனைவரும் ஒன்றிணைந்து அவரைப் பதவி விலகச் செய்ய வேண்டும்.

கடந்த ஓரிரு தினங்களாகவே ஜனாதிபதி மாளிகை வளாகத்துக்கு நேரியாடியாகச் சென்று, அங்குள்ள நிலைவரங்களை அவதானித்து, மிகநுட்பமாக திட்டமிட்டே நாம் அன்று ஜனாதிபதி மாளிகைக்குள் நுழைய முற்பட்டோம்.

ஆனால், அதனைக் கூட அறியாதளவிற்கு எமது நாட்டின் புலனாய்வு பிரிவு பலவீனமாகவுள்ளது. நாம் அங்கு சென்ற அன்றைய தினம் அப்பகுதியில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தோரை பணி நீக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அது தவறாகும். அவர்கள் மீது எந்தத் தவறும் கிடையாது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் இயலாமையை மறைப்பதற்காக ஏனையோரை பழிவாங்குவது பொருத்தமற்றது.

அன்றைய தினம் ஜனாதிபதி என்னைச் சந்திக்க அழைப்பதாக பிரதி பொலிஸ்மா அதிபர் பிம்ஸானி தெரிவித்தார். எனினும் அவருடனான சந்திப்பை நான் எனது முகநூலில் நேரடி ஒளிபரப்பு செய்வேன் என்று கூறிய பின்னர் அதற்கு பதில் எதுவும் வழங்கப்படவில்லை.

மாறாக, எவ்வித காரணமும் இன்றி எம்மைக் கைது செய்தனர். எம்மை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்குத் தகுந்த காரணம் எதுவும் இல்லை.

கைது செய்யப்பட்ட எம்மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. எவ்வாறிருப்பினும் இந்த அச்சுறுத்தல்களைக் கண்டு நாம் அஞ்சப் போபவர்கள் அல்லர்.

இதே போன்று மீண்டும் ஜனாதிபதி மாளிகைக்குச் சென்று, நுழைவாயிலை உடைத்தெறிந்தேனும் உள்சென்று, ஜனாதிபதியிடம் நேரடியாகவே நீங்கள் பதவி விலக வேண்டும் எனக் கூறுவதற்கு பெண்கள் அனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றேன். பெண்கள் வீதிக்கு இறங்கினால் பாதுகாப்புப்படையினரும் அஞ்சுவர்.

எனவே, நாட்டில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்த எம்முடன் கைகோர்க்குமாறு அழைப்பு விடுக்கின்றேன். – என்றார்.

# சூதாட்ட விடுதிகள் தொடர்பில் நிதி அமைச்சு விசேட தீர்மானம்

சூதாட்ட விடுதிகளுக்குள் நுழைவதற்காக வெளிநாட்டு முகவர்கள் ஊடாக சிட்டை (டோக்கன்) வழங்கும் முறையை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இரத்து செய்ய நிதி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இது தவிர சூது விளையாட்டை விளையாடும் வெளிநாட்டவர்கள் வெளிநாட்டுப் பணத்தை இந்நாட்டில் செலவழிக்க வேண்டும் என்ற விதிகளை விதிக்கவும் நிதியமைச்சு யோசனையொன்றை முன்வைத்துள்ளது.

இலங்கையில் தங்கியிருந்து சூது விளையாடும் வெளிநாட்டவர்களுக்கு வெளிநாடுகளில் உள்ள முகவர்கள் மூலம் சிட்டைகள் வழங்கப்பட்டன.

இதன் மூலம் அவர்கள் தங்கள் சொந்த நாட்டில் பணத்தை வைப்பிட்டு, இலங்கையில் உள்ள சூதாட்ட அரங்குகளுக்குள் நுழையவும் அனுமதியளிக்கப்பட்டது.

இந்த முறைமையால் நாட்டுக்குக் கிடைக்கக் கூடிய டொலர் மற்றும் யூரோ உள்ளிட்ட வெளிநாட்டு பணம் பாரியளவில் இழக்கப்படுவதாக நிதி அமைச்சிற்கு பல குற்றச்சாட்டுக்கள் கிடைக்கப் பெற்றுள்ளன என அமைச்சின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

சில வெளிநாட்டவர்கள் கொழும்பிலுள்ள பாரிய ஹோட்டல்களில் தங்கியிருந்து , சிட்டை முறைமையின் கீழ் நாளாந்தம் சூது விளையாட்டுக்களில் ஈடுபடுகின்றனர் என நிதி அமைச்சிடமுள்ள அறிக்கையின் மூலம் தெரியவந்துள்ளது.

இந்த நிலைமையின் கீழ் இழக்கப்படும் டொலர் உள்ளிட்ட வெளிநாட்டுப் பணத்தை மீண்டும் பெற்றுக் கொள்வதற்கான வழிமுறையாகவே, சூது விளையாட்டில் சிட்டை முறைமையை நீக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சின் அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

# டொலர் செலுத்துவோருக்கு எரிபொருள் வழங்க திட்டம்!

அத்தியாவசிய தேவைகளுக்காக டொலர் செலுத்தி எரிபொருளை பெற்றுக்கொள்ளும் நபர்கள் மற்றும் நிறுவனங்கள் பதிவு செய்துகொள்வதற்கான வசதிகளை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஏற்படுத்தியுள்ளது.

அதன்படி, பதிவு செய்வதற்கான வசதிகள் பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் ஊடாக வழங்கப்பட்டுள்ளன.

## பொருளாதார நெருக்கடிகள் காரணமாக யாசகம் பெறுவோர் எண்ணிக்கை அதிகரிப்பு?

தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கையில் அதிகளவான மக்கள் வறியவர்களாக மாறியுள்ளனர்.

ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மானுடவியல் துறையின் சிரேஷ்ட பேராசிரியர் யசஞ்சலி தேவிகா ஜயதிலக்க இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இந்த நிலைமை காரணமாக மக்கள் தமது உண்மையான எதிரியை அடையாளம் காண முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடிகள் காரணமாக சமூகத்தில் யாசகம் பெறும் மனநிலை அதிகரித்து வருவதாகவும் சிரேஷ்ட பேராசிரியர் யசாஞ்சலி தேவிகா ஜயதிலக்க மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# பாட்டும் நானே? பாவமும் நானே!

**‘கம்பவாரிதி’ இலங்கை ஜெயராஜ் தமது ‘உகரம்’ இணையத்தளத்தில் ‘பாட்டும் நானே! பாவமும் நானே!’ என்ற தலைப்பில் வாராந்தம் வரையும் கேள்வி - பதில் பகுதி ‘காலைக்கதிர்’ நாளிதழில் ஒவ்வொரு வாரமும் வெளியாகி வாசகர்களின் அறிவுக்குத் தீனியாகிறது.**




**1. கேள்வி:-** திருக்கேதீஸ்வரக் கும்பாபிஷேக நாள் கணிப்பில் பிழை நிகழ்ந்துவிட்டதாய் கௌசிகர் என்பவர் எழுதிய கட்டுரை படித்தீர்களா?

**பதில் :-** படித்தேன்! கும்பாபிஷேக நேர நிர்ணயம் பற்றி அவர் எழுதியிருந்த விடயங்களை ஆராய்ந்த பின்தான் நான் அது பற்றிச் சொல்லமுடியும். அதுதவிர, அக்கட்டுரையில் சொல்லப்பட்ட விடயங்கள் பலவற்றில் எனக்கு அபிப்பிராய பேதங்கள் பல உள்ளன. அவற்றைக் கீழே வரிசைப்படுத்துகிறேன்.

பஞ்சாங்கங்களில் மரபு ரீதியாகப் பேணப்பட்டு வரும் வாக்கிய பஞ்சாங்கத்தைப் பேணுவதே சரியானது என்பதுவே எனது கருத்து.

திருக்கணிதப் பஞ்சாங்கக் கணிப்புகள் ‘நாசா’வுடனான கணிப்புக்களுடன் ஒத்திருப்பதால் அதைத்தான் ஏற்கவேண்டும் எனும் கருத்திலும் எனக்கு உடன்பாடில்லை.

நண்பர் கௌசிகரின் கட்டுரையில் தெரிந்த, வாக்கிய பஞ்சாங்கத்தை முற்றாய் நிராகரிக்க வேண்டும் என்ற கருத்து மிகவும் தவறானது.

தனது கட்டுரையில் கௌசிகர், வாக்கிய பஞ்சாங்கத்துடனான தன் பகை உணர்ச்சியை ஆழப்பதித்திருந்தார். இந்திய இராணுவத்தால் நிகழ்ந்த அழிவு, முள்ளிவாய்க்காலில் நிகழ்ந்த அழிவு போன்றவற்றிற்கு வாக்கிய பஞ்சாங்கங்கக் கணிப்பின்படி நடந்ததால்த்தான் நிகழ்ந்தன எனும் அவரது கருத்து நகைப்புக்குரியது.

80 வீதமானோர் வாக்கிய பஞ்சாங்கத்தையும், 20 வீதமானோர் திருக்கணித பஞ்சாங்கத்தையும் பின்பற்றி வருவதாய் அவரே எழுதியிருக்கிறார். அவரது கருத்தின்படி பார்த்தால், திருக்கணித பஞ்சாங்கத்தைப் பின்பற்றி நடந்து வரும் அந்த 20 சதவீதமானவர்களுக்கும் எந்தத் தீமையும் வந்திருக்கக் கூடாதல்லவா?

வாக்கிய பஞ்சாங்கக் கணிப்பால்த்தான், சண்டையும் அழிவும் நிகழ்ந்ததென்கிறார் கௌசிகன். அது உண்மை என்றால், பேசாமல் திருக்கணிதப் பஞ்சாங்கத்தைக் கடைப்பிடிக்க வைத்து தமிழ் மக்களின் உரிமைகள் அனைத்தையும் சண்டையில்லாமலே நாம் பெற்றிருக்க முடியும் என்கிறாரா அவர்? இதுநாள் வரை நடந்தது போக, இனிவரும் காலத்தில் திருக்கணிதப் பஞ்சாங்கத்தை வைத்து மட்டும் தமிழ்மக்கள் தமது உரிமைகளைப் பெற்றுவிட முடியுமா? என்பதை நண்பர் உறுதிப்படுத்திச் சொல்லட்டும்.

நண்பரால் சொல்லப்பட்ட இத்தகைய செய்திகள், வாக்கிய பஞ்சாங்கத்தைப் பின்பற்றுவோரை மிரட்டி, திருக்கணிதப் பஞ்சாங்கப் பக்கம் இழுக்கும் முயற்சியாகவே கருதப்படவேண்டியிருக்கிறது.

நண்பர் கௌசிகன் பிழையான நேரம் என குறிப்பிட்டிருக்கும் நேரத்தில் திருக்கேதீஸ்வரக் கும்பாபிஷேகம் நடந்திருக்கிறது. அவர் சரியான நேரம் எனக் குறிப்பிட்டிருக்கும் நேரத்தில் பல்கலைக்கழகப் பரமேஸ்வர ஆலயக் கும்பாபிஷேகம் நடைபெற்றிருக்கிறது. இப்போது கேள்வி என்னவென்றால், திருக்கேதீஸ்வரக் கும்பாபிஷேகத்தால் நமக்கு தீமை வரப்போகிறதா? பரமேஸ்வர ஆலயக் கும்பாபிஷேகத்தால் நமக்கு நன்மை வரப் போகிறாதா? என்பதுதான். இரண்டுமே வடமாகாணத் தில் நடந்த கும்பாபிஷேகம் என்பதால்த்தான் இக் கேள்வி எழுகிறது.

பஞ்சாங்கம் கணிப்போர்க்கு கணித அறிவு மட்டும் இருந்தால் போதாது. அதனோடு சோதிட அறிவும், ஆகம அறிவும், விரதநிர்ணயம் செய்ய, புராண இதிகாசங்களின் அறிவும் அவசியம். அந்த விடயத்தில் இன்று எல்லாப் பஞ்சாங்கக்காரர்களும் பூரணம் பெற்றவர்களாய் இல்லை என்பது மட்டும் உண்மை. இன்று பெரும்பான்மையான அந்தணர்களின் நிலையும் இதுவேயாம். அதனால்த்தான் இக்குழப்பங்கள் விழைகின்றன.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ இவர் சொல்லும் பஞ்சாங்க உண்மை பிரபாகரனுக்குத் தெரிந்திருந்தால் அவர் சண்டை பிடிக்காமலே வென்றிருப்பார் போல. ஹி..ஹி..**

**2. கேள்வி:-** திருக்கேதீஸ்வரக் கும்பாபிஷேகத்தின் போது பல சமய நிறுவனங்களும் தத்தம் பெயர் பதிக்க பற்பல விடயங்களைச் செய்ததைக் காணமுடிந்தது. உங்கள் கம்பன் கழகம் ஏன் எதுவும் செய்யவில்லை?

**பதில்:-** கூட்டம் கூடும் இடத்தில் தங்கள், தங்கள் பொருள்களைக் கொண்டுபோய் விற்கிறவர்கள் இருக்கிறார்கள். அப்படியல்லாமல் சிலரது பொருள்களுக்காகவே தனியே கூட்டம் கூடுவதும் உண்டு. கம்பன் கழகம் இரண்டாம் வகையைச் சார்ந்தது.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ வாரிதியாருக்கு ரொம்பத்தான் கொழுப்புங்கோ!**

**3. கேள்வி:-** திருக்கேதீஸ்வரத்தில் சிவபூமி நிறுவனத்தால் வைக்கப்பட்ட சிவனது பெரிய சிலையின் படத்தைப் போட்டு சிவனது நிறம், அவரது தொப்புள் உறுப்பு என்பவை பற்றியெல்லாம் விளக்கம் அளித்து, நிறுவப்பட்ட அச்சிலை பற்றி மறைமுகமாய் குற்றம் சாட்டி, ‘தென்னாடு’ அமைப்பை நடாத்தும் ‘பார்த்தி’ என்பவர் முகநூலில் எழுதியிருந்தார். அதுபற்றி உங்கள் கருத்து?

**பதில்:-** இதுவரை சிவபெருமான் நம்மைக் காத்தது போக, இப்போது சிவபெருமானைக் காப்பதற்கு என்று சிலபேர் புறப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்குத் தாங்கள் தான் சிவபெருமானின் ‘கார்டியன்கள்’ என்று நினைப்பு. தொப்புள் விடயத்தில் அவர்கள் சொல்ல நினைப்பது என்னவென்றால், சிவபெருமான் கருவுற்றுப் பிறவாதவர் ஆதலால் அவருக்குத் தொப்புள்கொடித் தொடர்பு இருந்திராது. எனவே அவருக்குத் தொப்புள் இருக்க வாய்ப்பில்லை என்பதையேயாம். கருவுற்றுப் பிறவாமலே மற்றைய உறுப்புக்களை உருவாக்கிக் கொண்ட சிவனார் அதே போல ஒரு தொப்புளையும் உருவ அமைப்புக்காக உருவாக்கியிருக்க மாட்டாரா? என்று கேட்டால், இவர்கள் எழுத்தாளர் சுஜாத்தா எழுதுவது போல ‘ஙே’ என்று தான் விழிப்பார்கள்.

உருவமே இல்லாத சிவம் உயிர்களை ஈடேற்றுவதற்காக உருவநிலை கொள்வதாய் நம் சைவம் சொல்கிறது. உயிர்களை ஈடேற்றவென பன்றியாய்க் கூட மாறத் தயங்காத பெருங்கருணை கொண்ட நம் சிவனார் (கேவலம் கேழலாய்ப் பால் கொடுத்த - திருவாசகம்) ஆன்மாக்களை ஈர்த்து ஈடேற்றவென முழுமையான மனித உருக்கொள்வதற்காக இல்லாத தொப்புள் உறுப்பையும் தனக்குத் தானே ஆக்கிக் கொண்டாலும் ஆச்சரியப்படுவதற்கு ஏதுமில்லை.

சைவத்தில் புதிதாய் வந்திருக்கும் சில ‘வித்தகக் குசும்பர்கள்’ தம்முடைய வழிபாட்டில் காட்டும் அக்கறையை விட பிறரின் வழிபாட்டில் பிழை கண்டு பிடிப்பதிலேயே அதிக அக்கறை காட்டி வருகிறார்கள். எத்தனையோ பேர் தந்த ‘அலுப்புக்களை’ எல்லாம் சகித்த நமது சைவம் இவர்களை மட்டும் சகிக்காதா என்ன?

திருக்கேதீஸ்வரத்தில் வைக்கப்பட்ட சிவன் சிலையில் சின்னச்சின்ன பிழைகள் இருக்கத்தான் செய்கின்றன. ஆனாலும் அவற்றைப் பெரிய பிழைகள் என்று சொல்ல முடியாது. மாற்றுச் சமயங்கள் அங்கு சிவனது சைவச் சூழலை மாற்றும் சமயங்களாய் இயங்க முற்பட்டுக் கொண்டிருக்கும் இக்காலத்தில் நிமிர்ந்து நிற்கும் சிவன் சிலையைத் துணிந்து நிறுவியதைப் பாராட்டுவதை விட்டுவிட்டு, வெறுமனே குறை சொல்லிக் கொண்டிருப்பதால் ஆகப்போவது ஒன்றுமில்லை. குறை சொல்பவர்கள் தம்மால் முடிந்தால் இதைவிட அழகான ஒரு சிவன் சிலையைச் செய்வித்து அச்சூழலில் நிறுவுவார்களேயானால் அவர்களைப் பாராட்டலாம்.

‘பாட்டெழுதி புகழ் பெறுபவர்களும் இருக்கிறார்கள். பிழை கண்டுபிடித்து புகழ் பெறுபவரும் இருக்கிறார்கள்’ என்று திருவிளையாடல் படத்தில் தருமியாய் வந்த நாகேஷ் சொன்னது போலத்தான் இருக்கிறது இவர்களது செயல். ‘சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம் சொல்லிய வண்ணம் செயல்’ என்று வள்ளுவர் சும்மா சொல்லவில்லை.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ ‘நெஞ்சில் உரமும் இன்றி நேர்மைத் திறமும் இன்றி வஞ்சனை செய்வாரடி கிளியே வாய்ச்சொல்லில் வீரரடி’**

**4. கேள்வி:-** திருக்கேதீஸ்வரக் கும்பாபிஷேகத்திற்குச் சென்றீர்களா? அதுபற்றிய உங்களது மனப்பதிவுகள் சிலவற்றைப் பகிர்ந்து கொள்ளுங்களேன்.

**பதில்:-** பதிவு ஒன்று

சென்றேன். அதிசயமாய் அந்தப் பயணம் நிகழ்ந்தது. கொழும்பு - யாழ் பயண வாகனச்செலவு 50 ஆயிரம் ரூபாவிலிருந்து திடீரென ஒரு லட்சத்து அறுபததாயிரம் ஆக உயர, அங்கு போவதில்லை என முதலில் முடிவு செய்து, பின்னர் நண்பர்கள் வலியுறுத்த போனால் போகிறது என்று பயணம் புறப்பட்டோம். விடிகாலையில் ஆலய வாசலில் சென்று இறங்க, நண்பர் ‘செஞ்சொற் செல்வர்’ ஆறுதிருமுருகன் அவர்கள் என்னைக் கை பிடித்து அழைத்துச் சென்று சிவனுக்கும் அன்னைக்கும் எண்ணெய்க்காப்பு செய்வித்தார். சிவனே அழைத்துச் சென்று அக்காரியத்தைச் செய்வித்ததாய் நினைந்து மனம் உருகிப் போனேன்.

பதிவு இரண்டு

துறவிகள், அந்தணர்கள், ஓதுவார்கள், அடியார்கள் எனப் பலரும் கூடி நின்ற அழகால், திருக்கேதீஸ்வரநாதர் புத்துயிர் பெற்று காட்சி தந்தார். அக்காட்சி நெஞ்சை நெகிழ்வித்தது. கண்ணீரை அடக்கமுடியவில்லை.

பதிவு மூன்று

பலகாலத்தின் பின் நடைபெறும் இக்கும்பாபிஷேகத்தில், துறவிகள், அந்தணர்கள், அறிஞர்கள், ஆலய நிர்வாகிகள், திருப்பணிச் சபையினர், இறைச் சந்நிதானங்கள் அமைக்கத் துணை செய்த பெரு நிதியாளர்கள், இந்திய அரசினர், உடல் உழைப்பை நல்கிய தொண்டர்கள் எனப் பலரும் பங்கேற்றுப் பணி செய்திருந்தனர். அத்தனை பேரினதும் அரிய உழைப்பால்த்தான் கேதீச்சரத்தானது கருங்கற் கோயில் நிமிர்ந்து நிற்கிறது. ஆதலால் அத்தனை பேர் திருவடிகளையும் வணங்கத் தோன்றியது.

பதிவு நான்கு

இவ் ஆலயப் பணிகளில் காலாகாலமாய் பலரும் ஈடுபட்டு வருகின்றனர். ஆனாலும் பசுபதிச் செட்டியார், ‘சேர்’ கந்தையா வைத்தியநாதன் போன்ற ஒருசிலரின் தனித்த முயற்சிகள் வரலாற்றில் இடம்பிடித்திருக்கின்றன. அந்த வகையில் இம்முறை நடைபெற்ற கும்பாபிஷேகத்தின் போது வரலாற்றில் இடம்பிடித்திருக்கும் பெருமை, மறைந்த பெரியவர் கயிலாசபிள்ளை அவர்களுக்கும் அவரது துணைவியார் திருமதி அபிராமி கயிலாசபிள்ளை அவர்களுக்கும் சென்று சேர்ந்திருக்கிறது.


திரு.வி. கயிலாசபிள்ளை


திருமதி அபிராமி. கயிலாசபிள்ளை

(09ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை ரஷ்யாவிடம் உதவிகளை பெறலாம் அமெரிக்கா எந்தக் கட்டுப்பாட்டையும் விதிக்காது

## தூதர் ஜூலி சங் திட்டவட்டக் கருத்து

இலங்கை ரஷ்யாவிடம் உதவிகளை பெற்றுக்கொள்வது தொடர்பாக அமெரிக்கா எந்த கட்டுப்பாட்டையும் விதிக்கவில்லை. ஆனால், ரஷ்யாவிடம் இருந்து அமெரிக்காவுக்கு எரிபொருள் இறக்குமதி செய்வதை நாம் தடை செய்துள்ளோம். எமக்கு அந்த எரிபொருள் எரிசக்தி கொள்ளளவு போதுமானளவு இருக்கின்றது. ஆனால் உலக அளவில் ரஷ்யாவுக்கான வங்கி முறை, போக்குவரத்து முறை என்பன தடை செய்யப்பட்டுள்ளன. அது தொடர்பாக இலங்கை புரிந்து கொள்ள வேண்டும் என்று இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பில் மேலும் குறிப்பிடுகையில் –

அரசியல் மறுசீரமைப்பை தவிர்த்து நீங்கள் பொருளாதார நெருக்கடியை மட்டும் தீர்க்க முயற்சிக்க முடியாது. நெருக்கடிக்கு மத்தியில் இரண்டு துறைகளிலும் மறுசீரமைப்பை கொண்டு வருவதற்கு சிறந்த சந்தர்ப்பம் கிடைத்திருக்கின்றது. அமெரிக்கா இலங்கையின் நீண்டகால நண்பனாக இருக்கிறது. 70 வருட காலமாக இலங்கைக்கு உதவிகளை செய்து வந்திருக்கிறோம். நெருக்கடி இருக்கிறதோ இல்லையோ நாம் இலங்கையின் சிறந்த நண்பனாகத் தொடர்ந்திருப்போம். இதில் தனிப்பட்ட நபருக்கோ கட்சிக்கோ நாங்கள் ஆதரவளிப்பதில்லை. மாறாக இலங்கை மக்களுக்கு எமது ஆதரவைத் தெரிவிக்கிறோம்.

தற்போதைய சூழலில் சர்வதேச நாணய நிதியமே இலங்கைக்கான ஒரே தெரிவாக இருக்கின்றது. இலங்கை அவ்வாறு நம்புகிறது. உலகப் பொருளாதார நிபுணர்கள் உள்ளிட்ட சகலரும் இது தொடர்பாகப் பேசுகின்றனர். இலங்கை சர்வதேச நாணய நிதியத்தை நாட வேண்டும் என்பதையே சகலரும் வலியுறுத்துகின்றனர்.

அமெரிக்கா இலங்கை மக்களுக்கு உதவி செய்கிறது. எமது உதவி எமது ஒத்துழைப்பு நட்பு என்பது பதவியில் இருக்கின்ற ஜனாதிபதி உடனானது அல்ல. பிரதமருடனானதல்ல. இலங்கை மக்களுடனானதாகும். இலங்கையில் ஆட்சி மாற்றம் நடைபெற்றதுடன் சர்வதேச நாடுகள் உதவி செய்வதற்குக் காத்துக் கொண்டிருக்கின்றன என்ற விடயம் தவறானது. காரணம் வரிசைகளில் நிற்பது சாதாரண மக்கள். மேலும் கடன் மறுசீரமைப்பு செய்யப்படாத நாடு ஒன்றுக்கு சர்வதேச நிறுவனங்கள் உடனடியாக கடன் வழங்காது. எனவே சர்வதேச நாணய நிதியமே இருக்கின்ற ஒரே வழியாகும்.

இலங்கை ரஷ்யாவிடம் உதவிகளைப் பெற்றுக் கொள்வது தொடர்பாக அமெரிக்கா எந்தக் கட்டுப்பாட்டையும் விதிக்கவில்லை. ஆனால் ரஷ்யாவிடம் இருந்து அமெரிக்காவுக்கு எரிபொருள் இறக்குமதி செய்வதை நாம் தடை செய்துள்ளோம். எமக்கு அந்த எரிபொருள் எரிசக்தி கொள்ளளவு போதுமானளவு இருக்கின்றது. ஆனால், உலக அளவில் ரஷ்யாவுக்கான வங்கி முறை போக்குவரத்து முறை என்பன தடை செய்யப்பட்டுள்ளன. அது தொடர்பாக இலங்கை புரிந்துகொள்ள வேண்டும்.

இலங்கையில் அமெரிக்க இராணுவத் தளத்தை எம்.சி.சி. உடன்படிக்கை ஊடாக நிறுவப்போவதாக தவறான செய்தி பரப்பப்பட்டது. அமெரிக்க இராணுவ தளத்தை இலங்கையில் நிறுவும் நோக்கம் எமக்கு இல்லை. ஆனால், இன்னும் மக்கள் அதனை என்னிடம் கேட்கின்றனர். உலக அளவிலும் எம்.சி.சி. உடன்படிக்கை செய்திருக்கின்றோம்.

நேபாளம் அண்மையில் அதனை அங்கீகரித்து இருக்கிறது. அந்த சந்தர்ப்பத்தை இலங்கை இழந்து விட்டது தற்போது எம்.சி.சியை கொண்டு வரும் எவ்விதமான நகர்வுகளும் இடம்பெறவில்லை. எதிர்காலத்தில் இது தொடர்பில் பரிசீலனைகள் வரலாம்.

பொருளாதார அரசியல் மறுசீரமைப்பு அவசியம் என்பதை நாம் வலியுறுத்துகிறோம். அதனை எவ்வாறு செய்வது என்பதை இலங்கை மக்களும் அரசாங்கமும் தீர்மானிக்க வேண்டும். அரசமைப்பு மறுசீரமைப்பா அல்லது காபந்து அரசாங்கமா என்பதை இலங்கையே தீர்மானிக்க வேண்டும். – என்றார்.

## திருட்டு சைக்கிளை விளம்பரப்படுத்தி விற்பனைக்கு முயன்ற இளைஞன் கைது!

பொருள்கள் விற்பனை செய்வதற்கான பிரபல இணையத்தளத்தில் விளம்பரப்படுத்தி திருட்டு சைக்கிளை விற்பனை செய்ய முற்பட்ட இளைஞர் ஒருவர் வட்டுக்கோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது –

யாழ்ப்பாணம் மூளாய் வேரம் அக்கினி வைரவர் ஆலயத்தில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற இசை நிகழ்ச்சிக்குச் சென்றிருந்த பொன்னாலையைச் சேர்ந்த இளைஞன் ஒருவரின் சைக்கிள் களவு போயிருந்தது.

அது தொடர்பில் அன்றைய தினமே வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில், பொருள்களை விற்பனை செய்வதற்கான விளம்பரங்களை வெளியிடும் பிரபல இணையத்தளம் ஒன்றில் சைக்கிள் விற்பனை செய்யப்படவுள்ளதாக விளம்பரப்படுத்தப்பட்டிருந்தது.

அதனை அவதானித்த சைக்கிள் உரிமையாளர், விளம்பரத்தில் இருந்த தொலைபேசிக்கு அழைப்பை மேற்கொண்டு, சைக்கிளை வாங்கவுள்ளேன் எனக் கூறி விலையை பேசி தீர்மானித்து சங்கானை பகுதிக்கு வருமாறு கூறியுள்ளார்.

அதனை நம்பி சைக்கிளை விற்பனைக்காக விளம்பரப்படுத்தியிருந்த நபர் உரிமையாளரிடமே சைக்கிளை விற்க வந்த நிலையில் உரிமையாளரின் நண்பர்கள் மடக்கிப் பிடித்தனர்.

விற்பனைக்கு கொண்டு வந்த இளைஞனிடம் விசாரணைகளை முன்னெடுத்த வேளை, வைரவர் ஆலய இசை நிகழ்ச்சிக்கு தாம் வந்திருந்த போது, தம்மிடம் ஒருவர் இந்த சைக்கிளை 8 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்தார் எனவும், அதனையே தாம் வாங்கி மீள விற்பனை செய்வதற்காக விளம்பரப்படுத்தினேன் என கூறியுள்ளார். அதேவேளை இது தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு அறிவித்ததை அடுத்து, பொலிஸார் சைக்கிள் விற்பனை செய்ய வந்த இளைஞனை கைது செய்து பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர்.

## இலங்கைக்கு உதவுவது; ராஜபக்ஷ குடும்பத்துக்கு உதவுவது சர்வதேசத்தின் மத்தியில் இந்த நிலைப்பாடே காணப்படுகிறது!



### லக்ஷ்மன் கிரியெல்ல சாடல்

இலங்கைக்கு உதவுவதானது ராஜபக்ஷ குடும்பத்துக்கு உதவுவதைப் போன்றதாகும் என்ற நிலைப்பாடு சர்வதேசத்தின் மத்தியில் தோற்றம் பெற்றுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுகள் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளன எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ள போதிலும், சர்வதேச ஊடகங்கள் அதற்கு முரணான செய்திகளையே வெளியிட்டுள்ளன என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுகள் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளன என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ள போதிலும், இணக்கப்பாடொன்றை எட்டாமலேயே பேச்சுகள் நிறைவடைந்துள்ளன என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடன் மீள செலுத்தல் காலம் மறுசீரமைக்கப்பட்டதன் பின்னரே சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கப்பாடொன்றை எட்ட முடியும். நியூயோர்க்கில் ராஜபக்ஷக்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது. இவ்வாறான விடயங்கள் சர்வதேசத்தின் மத்தியில் இலங்கை மீதான நம்பிக்கையை இல்லாமல் செய்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தில் 50 சதவீதத்துக்கும் அதிக உரிமத்தை அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளே கொண்டுள்ளன.

இந்நிலையில் உலக நாடுகளின் மத்தியில் இலங்கைக்கு உதவுவதானது ராஜபக்ஷ குடும்பத்துக்கு உதவுவதைப் போன்றது என்ற நிலைப்பாடும் தோற்றம் பெற்றுள்ளது.

அது மாத்திரமன்றி முஸ்லிம் நாடுகள் உள்ளிட்ட பல உலக நாடுகளையும் இந்த அரசாங்கம் பகைத்துக் கொண்டுள்ளது. அதன் காரணமாகவே சர்வதேச உதவிகள் கிடைப்பதில் இந்தளவிற்குத் தாமதம் ஏற்படுகிறது.

எனவே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகாமல் சர்வதேசத்திடமிருந்து எந்த உதவிகளையும் எதிர்பார்க்க முடியாது. காரணம் கிடைக்கப்பெறும் நிதி உதவிகள் முறையாக மக்களைச் சென்றடையுமா என்ற சந்தேகம் சர்வதேசத்தின் மத்தியில் நிலவுகிறது. – என்றார்.

## எரிபொருள் விலையேற்றம் பற்றி ஆராய துறைசார் அதிகாரிகள் கோப் குழுவிற்கு

பெற்றோல் மற்றும் டீசல் ஆகியவற்றை 250 ரூபாவிற்கு விற்பனை செய்ய முடியும் என இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக் குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளமை பாரதூரமானது.

இந்த விடயம் தொடர்பில் மக்கள் அதிக கவனம் செலுத்தியுள்ளார்கள். எரிபொருள் விலையேற்றம் தொடர்பில் ஆராய மின்சாரத் துறை மற்றும் வலுசக்தி, இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் அதிகாரிகள் எதிர்வரும் நாள்களின் கோப் குழுவிற்கு அழைக்கப்படுவார்கள் என கோப் குழுவின் தலைவர் பேராசிரியர் சரித ஹேரத் தெரிவித்தார்.

இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக் குழுவின் 2018 மற்றும் 2019ஆம் ஆண்டுக்கான கணக்காய்வு அறிக்கை மற்றும் தற்போதைய செயலாற்றுகை தொடர்பில் ஆராய கோப் குழு வியாழக்கிழமை கூடியது.

எரிபொருள் கொள்வனவு செய்தல் மற்றும் வரி அறவிடல் ஆகியவற்றை முழுமையாக ஆராய்ந்ததைத் தொடர்ந்து 250 ரூபாவிற்கு எரிபொருளை விநியோகிக்க முடியும் என்பதை அறிய முடிந்தது.

அதற்கமைய ஒரு லீற்றர் பெற்றோல் மற்றும் டீசலை 250 ரூபாவிற்கும் குறைவான விலைக்கு விற்பனை செய்ய முடியும் என்பதை தனது தனிப்பட்ட கருத்தாக குறிப்பிட்டதாக ஜனக ரத்நாயக்க தெரிவித்தார்.

எரிபொருள் விலை தொடர்பில் பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவரின் கருத்து பாரதூரமானது. இந்த விடயம் தொடர்பில் மக்கள் அதிக கவனம் செலுத்தியுள்ளார்கள்.

வலுசக்தி மற்றும் மின்சாரத்துறை அமைச்சின் அதிகாரிகள், பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் அதிகாரிகள் ஆகியோரை எதிர்வரும் நாள்களில் கோப் குழுவிற்கு அழைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## வேகமாகப் பரவுகின்றது இன்புளுவன்ஸா நோய்!

தற்போது வேகமாகப் பரவி வரும் இன்புளுவன்சா வைரஸ், கர்ப்பிணித் தாய்மார்களுக்கும், குழந்தை பிரசவித்த தாய்மார்களுக்கும் மற்றும் குழந்தைகளுக்கும் கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தும் என்பதால் மிகவும் அவதானமாக இருக்குமாறு மகப்பேற்று மற்றும் மகளிர் மருத்துவ நிபுணர் சனத் லெனரோல் தெரிவித்துள்ளார்.

கர்ப்பிணித் தாய்மார்கள் முடிந்தவரை முகக் கவசம் அணியுமாறும், வைரஸ் பரவுவதைத் தவிர்ப்பதற்காக மேலும் மக்கள் நெரிசல் மிகுந்த இடங்களுக்கு செல்வதைத் தவிர்க்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

இந்த நாள்களில் காய்ச்சல் ஏற்படுமிடத்து உடனடியாக மகப்பேற்று மற்றும் மகளிர் மருத்துவ நிபுணரை சந்தித்து வைத்தியசாலைகளில் சேர்க்கவும். தாயும் குழந்தையும் கூடிய விரைவில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டால், அவர்களுக்கு ஏற்படும் பாதிப்புகளில் இருந்து பாதுகாக்கத் தேவையான சிகிச்சையை அளிக்க முடியும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# தெல்லிப்பழை எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று எவ்வாறு எரிபொருள் வழங்கப்பட்டது?




தெல்லிப்பழை எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்றும் (வெள்ளிக்கிழமை) சிலருக்கு எரிபொருள் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

எரிபொருள் கப்பல் நாட்டை வந்தடையாத நிலையிலும் எரிபொருளுக்குரிய டொலர்களை அரசு செலுத்தாத காரணத்தாலும் எரிபொருள் நாட்டில் இன்மையால் எத்தனையோ நோயாளர்களும், அரச சேவையாளர்களும் பொதுச் சேவைகளும் பெரிதும் பாதிப்படைந்துள்ளன.

அத்தியாவசிய சேவைகளாகிய சுகாதாரத் துறையினர்களுக்கு ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் எரிபொருள் வழங்கப்படும் என்றிருந்த நிலையிலும் நேற்று வெள்ளிக்கிழமையாயினும் 48 மணித்தியாலத்துக்கு அந்த வழங்கலும் இடைநிறுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பில் சுகாதார சேவைகள் முற்றாக ஸ்தம்பிதமடையும் நிலையில் உள்ளன.

கழிவகற்றல் சேவையை மேற்கொள்ளும் யாழ். மாநகரசபை உட்பட்ட உள்ளூராட்சி மன்றங்கள் எரிபொருள் இன்மையால் தமது மக்கள் கடமையை ஒழுங்காக மேற்கொள்ள முடியாத நிலைமை காணப்படுகின்றது. நாட்டின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளது. பொதுப் போக்குவரத்துகளும் முற்றாக ஸ்தம்பிக்கும் நிலையில் நாடு.

இதேநேரம், மக்களுக்கு பாரிய சேவை வழங்குகின்ற மின்சார சபைக்குக் கூட எரிபொருள் கிரமமாக வழங்காதமையால் அவர்கள் வழங்கலில் ஏற்படுகின்ற கோளாறுகளை சரிசெய்யமுடியாத நிலைமை காணப்படுகின்றது. கடந்த புதன்கிழமை சண்டிலிப்பாயில் 90 குடும்பங்களுக்குரிய மின் இணைப்பை வழங்கும் இயந்திரத்தில் கோளாறு ஏற்பட்டும் – அது தொடர்பில் அந்தப் பகுதி மக்கள் மின்சாரசபையின் பாவனையாளர் சேவை இலக்கத்துடன் தொடர்புகொண்டு முறையிட்டும் மறுநாள் வியாழன் மாலைவரை அது சீர்செய்யப்படாமல் அந்தக் கிராமமே இருளில் மூழ்கியுள்ளது. இந்தப் பிரதேசத்தில் 80 வீதமான குடும்பங்கள் குழாய்க்கிணறு உள்ளவர்கள். மின்சாரம் இன்மையால் அவர்கள் குடிப்பதற்கு நீர் இன்றி கிணறு அமைந்துள்ள ஒன்று, இரண்டு வீடுகளை நாடி குடங்களுடனும் போத்தல்களுடனும் அலைந்தமையை காணக்கூடியதாக உள்ளது.

இதேபோன்றுதான் சுயதொழில் மேற்கொள்பவர்களும். கட்டட ஒப்பந்த காரர்கள், தபால் ஊழியர்கள், ஆசிரியர்கள், மாணவர்களின் பெற்றோர் என அனைவரும். நாட்டில் ஒவ்வொரு சேவையும் முக்கியமானதுதான்.

இந்த நிலையில், தெல்லிப்பழை எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்றுமுன்தினம் (வியாழக்கிழமை) மதியம் 10 இற்கு மேற்பட்ட மோட்டார் சைக்கிள்களுக்கு எரிபொருள் வழங்கப்பட்டது. இவ்வாறு தினமும் நடைபெறுகின்றது என அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் கவலை தெரிவித்தனர்.

இது தொடர்பில், எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளருடன் 'காலைக்கதிர்' ஆசிரியர் பீடம் தொடர்பு கொண்டு கேட்டபோது –

"அரச அதிபரால் சிபாரிசு செய்யப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு மட்டுமே நாம் எரிபொருள்களை வழங்குகின்றோம். அவர்கள் 20 பேரை சிபாரிசு செய்தார்கள். ஆயினும் நாம் 10 பேருக்கு மட்டுமே வழங்குகின்றோம்". – என்றார்.

இன்றைய நிலையில், மிக அத்தியாவசிய சேவைகளான சுகாதாரத் துறை, மின்சாரசபை என்பன முடங்கும் நிலையில் அரச அதிபர் இவ்வாறு பொறுப்பற்று தமக்கு இயைவானவர்களுக்கு எரிபொருள்களை எந்தக் காரணமும் இன்றி வழங்குவது முறையோ என்று மக்கள் விசனம் தெரிவித்தனர். இது தொடர்பில் வலி.வடக்கு பிரதேச செயலர் மீதும் அவர்கள் காட்டத்துடன் கருத்துத் தெரிவித்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# பாட்டும் நானே?...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய அரசின் உதவி போக, கோடிக்கணக்காக விரிந்த மற்றைய திருப்பணிச் செலவுகளின் பெரும்பகுதியை தங்கள் குடும்பத்தின் சார்பில் பொறுப்பேற்றும், மற்றையவற்றைத் தமது அன்பர்கள், நண்பர்கள் ஆகியோரை ஒருமித்து இணைத்துப் பங்கேற்கவைத்தும் அக் குடும்பம் செய்த பணிகள் வார்த்தைகளுக்கு அப்பாற்பட்டவை. அண்மைக்காலமாக நம் மண்ணில் நடைபெறும் அறக்காரியங்கள் அனைத்திலும் அக்குடும்பத்தாரின் நிழல் படிந்தே இருக்கிறது. தம்மை வெளிக்காட்டாமல் அவர்கள் செய்யும் கொடைகள் நினைத்தும் பார்க்க முடியாதவை.

திருக்கேதீஸ்வர ஆலய விடயத்தில் அவர்கள் வெறும் கொடையாளிகள் மட்டுமல்லர். திருக்கேதீச்சரத்தானது பெரும் பக்தர்கள். போர்க்காலத்தில் கோயில்ச்சூழல் இராணுவ மயமாக்கப்பட்டிருந்த போது, சிவபக்தி பேசிய பலரும் அந்தத் திசைக்கே ஒரு கும்பிடு போட்டுவிட்டு, சிவனைத் திரும்பியும் பார்க்காமல் இருந்த நிலையில், தம் உயிரையும் மதிக்காது, சிவன் தம்மைக் காப்பார் எனும் நம்பிக்கையோடு, துணிந்து அங்கு சென்று சிவனைத் தரிசித்து வந்த பெருமைக்குரிய மெய்யடியார்கள் அவர்கள். திரு. கயிலாசபிள்ளை அவர்கள் இருந்த போதும் அவர்கள் மறைந்த பின்னும் அக்குடும்பம் கேதீச்சரத்தான் மீது காட்டும் விருப்புக் கண்டு நான் வியந்திருக்கிறேன்.

பணம் பலரிடமும் இருக்கிறது. அதை அள்ளிக் கொடுக்கும் மனம் சிலரிடம் தான் இருக்கிறது. 'சிவனுக்கு நான் பணம் கொடுக்கவில்லை. அது அவன் தந்த பணம் அதனால் அது அவனுக்கே உரியது' என்று சொல்லி அள்ளிக் கொடுக்கும் அவர்களது பக்தி நிலை அபூர்வமானது.

கயிலாசபிள்ளை அவர்கள் அமரரான பின்பும், எடுத்துக் கொண்ட பணியில் கொஞ்சம் கூட சோர்வடையாமல், தனித்து நின்று அம்மையார் அபிராமி கயிலாசபிள்ளை அவர்கள், கும்பாபிஷேகப் பணிகளை முன்னெடுத்த விதம் ஆச்சரியமானது. இராப்பகலாக அதே நினைவாய் இருந்து தன் பணியை நிறைவேற்றி வெற்றி கண்டிருக்கிறார் அவர்.

ஒரு 'குமரைக்' கரையேற்றும் பொறுப்புணர்ச்சியோடு கும்பாபிஷேகப் பணிகளை முடிக்க அவர் தவித்த தவிப்பும், பட்டபாடும் நினைத்தும் பார்க்க முடியாதவை. இடைக்காலத்தில் ஆலயப் பணத்தைக் கையாடியதாய் குற்றம் சாட்டியும், பழி சொல்லியும், இவ்வளவு பெரிய பணி செய்த அந்தக் குடும்பத்தை இழிவுபடுத்தவும் சிலர் முயன்றார்கள். அந்த எதிர்ப்புக்களையெல்லாம் தனித்து நின்று சமாளித்து அம்மையார் இயங்கிய விதம் கண்டு, நெகிழ்ந்திருக்கிறேன். தனித்து நின்று தன் கணவனாரின் விருப்பத்தை நிறைவேற்றி அவரது ஆத்மசாந்திக்கு வழி செய்திருக்கிறார் அம்மையார். கயிலாசபிள்ளை அவர்களின் குடும்பத்தார் சிவனை தெய்வமாகக் கருதுவதில்லை. தமது உறவாகவே கருதுகிறார்கள்.

திருக்கேதீஸ்வர ஆலயப் பணிகளால் வரலாற்றுப் புகழ் கொண்டோர் வரிசையில் இம்முறை நடந்த கும்பாபிஷேகத்தின் மூலம், கயிலாசபிள்ளை குடும்பத்தாரும் பதிவாகியிருக்கின்றனர். ஈழத்துச் சைவர்கள் மட்டுமன்றி, சைவ உலகம் முழுவதுமே கூட அவர்களைப் போற்றக் கடமைப் பட்டிருப்பதாய் நினைக்கிறேன்.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ 'நல்லார் ஒருவர் உளரே அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை'**

# யாழ். போதனா வைத்தியசாலைக்கு நாதன் அறக்கட்டளையால் மருந்துகள்



யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தியின் வேண்டுகோளுக்கு அமைய எஸ்.கே. நாதன் அறக்கட்டளையின் முழுமையான நிதிப்பங்களிப்பால் தற்போது தட்டுப்பாடு நிலவும் அத்தியாவசிய 8 லட்சத்து 60 ஆயிரம் ரூபா பெறுமதியான மருந்துப் பொருள்கள் யாழ்.போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் வைத்தியர் நந்தகுமாரிடம் என்.சிவகுமாரால் கடந்த வியாழக்கிழமை யாழ் போதனா வைத்தியசாலைக்கு வழங்கி வைக்கப்பட்டன.

இலங்கையில் தற்காலத்தில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக மருத்துவம் சார்ந்த பொருள்களுக்குத் தட்டுப்பாடு நிலவி வரும் நிலையில் மானுடம் மிக்க மருத்துவ சேவையை அதன் தேவை கருதி வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி எஸ்.கே. முதியோர் இல்லம், எஸ்.கே.அறிவுச்சோலை சிறுவர் இல்லம் காரைநகர் எஸ்.கே. நாதன் நற்பணிமன்றம் ஆகியவற்றின் பணிப்பாளரான சுப்பிரமணியம் கதிர்காமநாதனின் அனுசரணையிலும் ஏற்கனவே யாழ்.போதனா வைத்தியசாலை மற்றும் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைகளுக்கு கிளிநொச்சியில் 5.5 கோடி ரூபாவில் அமைக்கப்பட்ட கண் மற்றும் என்பு முறிவு விடுதிகள்,யாழ்.பல்கலைக்கழக மருத்துவப் பீடத்துக்கு பி.சி.ஆர். இயந்திரம், யாழ் போதனாவைத்தியசாலைக்கு சி.ரி. ஸ்கான் இயந்திரம் என வடக்கின் மருத்துவ துறைக்கு பல்வேறு வகையில் உதவிகளை வழங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

கொவிட் 19 நிலவிய போது மருத்துவ பொருள்கள், பாதுகாப்பு உடைகள் மற்றும் மருத்துவ இயந்திரங்கள் உபகரணங்கள் என்பனவற்றை வழங்கியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது

வியாழக்கிழமை இடம்பெற்ற இந்த நிகழ்வில் யாழ்.போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் மற்றும் வைத்தியர்கள், சமூக சேவையாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

**இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.**

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!



- செல்லத்துரை ரவீந்திரன் -

## அங்கம்-59

**மாவை, சாணக்கியன், சம்பந்தன், புலம்பெயர் சமூகம்**

அமையக்கூடிய இடைக்கால அரசில் இணைந்து பயணித்து, ஒரு தீர்வைப் பெறுவதற்கு கூட்டமைப்புக்கு எல்லா தரப்பினரதும் ஆதரவும் இருக்க வேண்டும். அதற்காக எல்லாப் பகுதிகளோடும், புலம்பெயர் அமைப்புகளோடும், பேசுவோம் என்றும், கஜேந்திரகுமார் அரசியல் ரீதியாகத் தங்களோடு இணைந்த நிலையில் இல்லாவிட்டாலும், தமிழ் மக்கள் மேலும் அவருடன் ஈடுபட்டு ஒத்த நிலைக்கு யாவரும் வரவேண்டும் என்றும் கூறினார் மாவை சேனாதிராஜா.



அதே நேரம், அவரது கட்சியிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஸ்ரீதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன் ஆகியோருடன் வேலன் சுவாமிகளும், திருகோணமலை மறை மாவட்ட ஆயர் நோயல் இம்மானுவேலும் வட அமெரிக்கத் தமிழ் சங்க பேரவை முன்னெடுத்த 'மாபெரும் பேரவைத் தமிழ் விழாவில்' பங்கெடுத்தனர்.

அங்கு உலகத் தமிழ் அமைப்புகளின் பேரவையின் பிரதிநிதிகளுடனான பேச்சுக்களில் வடக்கு, கிழக்கு பொருளாதார மேம்பாட்டுக்கான எதிர்காலத் திட்டமிடல்கள் மற்றும் உபாயங்கள் தொடர்பிலும் கரிசனைகள் தெரிவிக்கப்பட்டு, உலகத் தமிழ் அமைப்புகளின் பேர வையின் பிரதிநிதிகளால் சர்வதேச ரீதியில் நடத்தப்பட்டுக் கண்காணிக்கப்படும் சுதந்திர வாக்கெடுப்பு நடைபெறும் வரை, தீவின் வடக்கு, கிழக்கு பிராந்தியத்தில் உள்ள ஈழத் தமிழர்களுக்கான இடைக்கால சர்வதேச பாதுகாப்பு பொறிமுறை, அரசியல் வாதங்கள் மற்றும் சட்டமுறைகள் மூலம் தமிழ் இனப்படுகொலை நடந்தது என்ற கருத்தியலுக்கு உலக அளவில் அங்கீகாரத்தை பெறும் முயற்சிகளை முன்னெடுத்தல், புலம்பெயர் தமிழர்கள், ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பேரவை, சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றம், சர்வதேச நீதிமன்றம் மற்றும் சர்வதேச நாடுகளில் தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலைக் குற்றங்களுக்காக இலங்கைக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்தல், தமிழர்களின் இறையாண்மை அடிப்படையிலான பொருளாதார வளர்ச்சிக்காகக் குறுகிய மற்றும் நீண்ட காலப்பகுதியில் தமிழர் தேசத்தில் பொருளாதார வளர்ச்சிக் கட்டமைப்புகளை உருவாக்குதல் ஆகிய இலக்குகளை நோக்கிச் செயற்பட உள்ளோம் எனத் தெரிவித்தனர். (காலைக் கதிர் – 4, ஜுலை 2022 பதிப்பிலிருந்து)

அண்மையில் சுவிஸர்லாந்துக்கு அந்த நாட்டில் இருந்து வந்த அழைப்பில் கருத்தரங்கத்துக்குச் சென்றிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன், நோர்வேயில் அதன் தலைநகர் ஒஸ்லோவில் தமிழ் புலம்பெயர் மக்களைச் சந்தித்தபோது, தமிழ்க் கூட்டமைப்பு 'பிளவு படாத' இலங்கைக்குள் ஒரு தீர்வையே கோருகிறது எனவும், புலம்பெயர் தமிழர்களாலேயே நாட்டுக்கு விடிவு கிடைக்கும் எனவும் தெரிவித்திருக்கிறார்.

கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் வழங்கிய செவ்விய ஒன்றில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுவின் தீர்மானத்தின்படி அதன் தலைவராகத் தானே தொடர்ந்தும் இருக்கிறார் எனவும், கூட்டமைப்புக்குள் இருப்பவர்கள் அவரின் தலைவர் பதவியை சவாலுக்கு உட்படுத்திக் கருத்துக்கள் எதனையும் முன்வைக்கவில்லை, தனது உடல் நிலையில் சிறிய தாக்கம் ஏற்பட்டாலும் தாம் இன்னமும் தைரியத்துடன் தான் இருக்கிறார் எனவும் கூறினார். அத்தோடு தமிழ் மக்கள் சகல உரிமைகளுடனும் சுதந்திரமாக வாழும் நிலை ஏற்பட வேண்டும், அந்த நிலையை ஆட்சியாளர்கள் ஏற்படுத்தாவிடினும், சர்வதேச சமூகம் ஏற்படுத்தியே தீரும், அந்த நம்பிக்கை இன்னும் வீண் போகவில்லை எனவும் அறிவித்தார்.

இந்தப் பேச்சுக்கள் தரக்கூடிய தாக்கங்களைப் பார்த்தால் எந்தத் திடமான அரசியல் பாதையோ, திட்டங்களோ இல்லாது, காலங்களுக்கு ஏற்ப ஏதோ செய்து, வெறும்வாயில் வெற்றிலையைச் சப்பி இனப் பிரச்சினைக்கான தீர்வு என்ற பந்தை உருட்டிக் கொண்டே இருக்கிறார்கள். அந்தப் பந்து முறையான – சமயோசிகமான – நகர்வுகளால் 'கோல்' போடக்கூடியதற்கு ஏதுவாக மைதானத்தில் கோல் கம்பங்களுக்குக் கிட்டவந்ததாகக் கூடத் தெரியவில்லை.

மாவை சேனாதிராஜா தங்களைப் பேச அழைக்கிறார்கள் என்பதில் ஒரு முக்கியத்துவத்தைப் பார்க்கிறார். அவர் பலாபலன்களை ஆழம் பார்த்தவராகத் தெரியவில்லை. இடைக்கால அரசில் இணைந்தாவது ஏதும் பேசிப் பெறுவோம் என்கிறார்.

சாணக்கியன் தான் பேசிய புலம்பெயர் மக்களிடையே, தீர்வுப் பொதியை 'பிளவுபடாத நாட்டுக்குள்' என அடைமொழி வைக்கிறார்.



இருவரும் புலம்பெயர் மக்கள்தான் ஆதரவு தந்து தீர்வைப் பெறுவதற்கு உதவ வேண்டுமெனக் கேட்கிறார்கள். ஆனால் சம்பந்தனோ சற்று வித்தியாசமாகப் பார்க்கிறார்.

அதேசமயம் அழைப்பின் பேரில் அமெரிக்கக் கூட்டத்தில் கலந்து கொண்ட கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தில், தமிழ்ப் பேரவை, புலம்பெயர் அமைப்பு சர்வஜன வாக்கெடுப்புக்கும், இறைமைய மீட்டு கொள்ளவும், இனப்படுகொலையை நிரூபித்து நீதியை பெறவும் தொடர்ந்து முன்னேறுவோம் என்று தெரிவிக்கின்றது.

'பிளவுபடாத', 'பிரிக்கப்படாத', 'பிரிக்க முடியாத என்ற அளவுக்கு உத்தரவாதங்கள் தந்து, ஒரு நாட்டுக்குள்ளான தீர்வை நோக்கி முன்னேற தமிழ்க் கூட்டமைப்பு இணங்குகிறது எனில், வட்டுக்கோட்டை தீர்மானத்தின் அடிப்படையில் இறைமையை நோக்கி நகர்வோம் என தமிழர் பேரவை அமைப்பு அமெரிக்காவில் அறிவிக்கிறது என்றால், இந்த முரண்பாடான நிலைப்பாடுகளை பேரினவாதத்தில் மூழ்கிக் கிடப்பவர்கள் மட்டுமல்லர், பெரும்பான்மையினரும் எப்படி கணக்கெடுப்பார்கள்?

இறைமையை மீட்பதை விட்டு, உண்மையாகவே ஒரு நாட்டுக்குள் ஒற்றையாட்சிக்கான தீர்மானத்துடன் தமிழ் கூட்டமைப்பு இணங்கி வருகிறதா அல்லது பிள்ளையையும் கிள்ளித் தொட்டிலையும் ஆட்டி நல்ல பிள்ளை வேடம் போடுகிறதா என்று எண்ணம்தான் தோன்றும்.

கூட்டமைப்பில் தனது தலைமைப் பதவிக்கு யாரும் சவால் விடவில்லை, ஆனால் கூட்டமைப்பைப் பலவீனப்படுத்த கருத்துக்களை ஊக்குவிக்கிறார்கள் என சம்பந்தன் தெரிவிக்கிறார். அவரது வார்த்தைகளில் தமிழ் மக்கள் சுதந்திரமாகவும் சகல உரிமைகளுடன் வாழும் நிலையை ஆட்சியாளர்கள் ஏற்படுத்த மாட்டார்கள் என்ற தொனியே தென்படுகின்றது. அப்படியானால் அவர் சர்வதேச சமூகம் அதை ஏற்படுதியே தீரும் என்கிறார். அந்தச் சொல்லாடலில் அவர் சர்வதேச சமூகத்தில் 'புலம்பெயர் தமிழ் மக்களையும்' உள்ளடக்குகிறாரா அல்லது 'சர்வதேச நாடுகள்' அதனைச் செய்யும் எனக் குறிப்பிட்டு, புலம்பெயர் தமிழ் மக்களைப் பற்றி அலட்டிக் கொள்ளவில்லையா தெரியவில்லை.

முரண்பாடுகளில் இணக்கம் கண்டு பொது நிலைப்பாட்டில் முன்னேறுவது அரசியல் விவேகம். ராஜபக்ஷக்களின் அரசியல் அச்சாணி இனக்குரோதமும் இனவெறியும்தான். ஆனால் கோட்டாவும் ராஜபக்ஷக்களின் பக்க வேர்களும் பூண்டோடு – கூண்டோடு – களையப்பட வேண்டும். அதற்காகத் தமிழ்ப் பரப்புகள் ஆதரவு தருவது யதார்த்தம். ஆனால் அதற்குப் பின் என்ன நடக்க வேண்டும் என்பதிலும் தெளிவு வேண்டும் இங்கு அரசியல் அறிந்தவர்கள் பொறுப்பிலிருந்து கொண்டு விடயங்களை நடத்துவதாகத் தெரியவில்லை. அப்படியானால் உள்நாட்டில் கூட்டமைப்பின் நிலைக்கும் புலம்பெயர் வெளிப்படுத்தும் முரண்கள் எப்படியான தாக்கங்களைத் தரும் எனக் கணக்கெடுக்க வேண்டும். இயலாத் தன்மைகளும் வீம்புகளும் தமிழ் மக்களின் நிலையை ஆட்டிப் படுத்திக் கொண்டிருப்பது போல் தெரிகிறது.

(வளரும்)




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழ்ப் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=